வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 14.12.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 348 பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## பேரிடர் பாதிப்புக்காக வடக்குக்கு தேவையான நிதி வழங்கத் தயார்!

### மன்னாரில் தெரிவித்தார் ஜனாதிபதி

#### நிவாரணக் கொடுப்பனவுகள் மக்களை சென்றடைவதில் தாமதம் எனவும் விசனம்

மன்னார், டிசெ. 14

பேரிடர் காரணமாக வடக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட உள்ளூர் வீதிகளைத் திருத்துவதற்குத் தேவையான நிதியை வடக்கு மாகாண சபைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. அத்தியாவசியத் தேவையாகக் காணப்படும் கிராமிய வீதிகளைப் புனரமைப்பதே எமது தற்போதைய முக்கிய இலக்காகும் என

15



## வடக்கு மீனவர்களின் உரிமைகளை இழப்பதற்கு இடமளிக்கமாட்டோம்!

### உறுதிபடக் கூறினார் அநுரகுமார

மன்னார், டிசெ. 14

எமது கடல் வளத்தைப் பாதுகாக்கக் கடற்படை நடவடிக்கை எடுத்து வரும் அதேவேளை, இது இராஜதந்திர ரீதியிலும் கையாளப்படவேண்டும். வடக்கு மீனவர்களின் உரிமைகளை இழப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்" என உறுதியாகத் தெரிவித்தார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க.

மன்னாரில் நேற்று நடைபெற்ற விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தக் கூட்டத்தில் மீன்பிடித்துறை தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்பட்டது. புயல் காரணமாகத் தொழிலுக்குச் செல்லாத மீனவர்களுக்கு இதுவரை எவ்வித இழப்பீடும் வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, அவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், எமது கடல் வளத்தைப் பாதுகாக்கக் கடற்படை நடவடிக்கை எடுத்து வரும் அதேவேளை, இது இராஜதந்திர ரீதியிலும் கையாளப்படவேண்டும். வடக்கு மீனவர்களின்

15

## இலங்கைக்கு புதிய அமெ. தூதுவர்!



நியூயோர்க், டிசெ. 14

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பினால் இலங்கைக்கான புதிய தூதுவராகப் பரிந்துரைக்கப்பட்ட எரிக் மேயர், செனட் வெளிவிவகாரக் குழுவின் முன் சாட்சியமளித்துள்ளார்.

இதன்போது, அமெரிக்க அரசாங்கம் கவனம் செலுத்தவிருக்கும் மூன்று முக்கிய இலக்குகளை அவர்

15

## நடுநிலையான, பாரபட்சமற்ற வெளியுறவு கொள்கை தேவை!

### வலியுறுத்துகிறார் மைத்திரிபால

கொழும்பு, டிசெ. 14

நடுநிலையான, பாரபட்சமற்ற வெளிநாட்டுக் கொள்கை மிகவும் அவசியம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெள்ளத்தால் பொலனறுவை மாவட்டத்தில் உயிர்ச் சேதம் இல்லை என்றாலும், பயிர்கள் பெருமளவில் அழிந்துள்ளன. வீடுகள்

15

## இலங்கை மீண்டெழ ஆஸி. துணை நிற்கும்

### அந்நாட்டு துணை அமைச்சர் பிரதமரிடம் உறுதியளிப்பு

கொழும்பு, டிசெ. 14

பேரிடரால் ஏற்பட்ட நெருக்கடியான நிலையில் இருந்து இலங்கை மீண்டெழுவதற்கு அவுஸ்திரேலியா துணை நிற்கும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் குடியுரிமை, ஒழுக்கநெறி மற்றும் பல்கலாசார அலுவல்கள் மற்றும் சர்வதேச கல்விக் கான துணை அமைச்சர் ஜூலியன் ஹில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

15

## டிசெ. 16ஆம் திகதி முதல் மீண்டும் கனமான மழை


யாழ்ப்பாணம், டிசெ. 14

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஒரு சில இடங்களில் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

15

## ராஜபக்ஷர்கள் இப்போது அமைதி காக்கவில்லை!

### முன்னாள் அமைச்சர் சமல்



கொழும்பு, டிசெ. 14

ராஜபக்ஷர்கள் அமைதி காக்கவில்லை. மாறாக பொறுப்புக்களை நிறைவேற்றிக்கொண்டுள்ளனர் என முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் இல்லாமல் இருக்க முடியாது. ராஜபக்ஷர்கள் அமைதி காக்கவில்லை அவர்கள் தங்கள் பொறுப்புகளையும்

02

## மலையகத் தமிழ் உறவுகளுக்கு வடக்கு-கிழக்கு துணை நிற்கும்!

### கூறுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், டிசெ. 14

"அண்மைய இயற்கை அனர்த்தம் மலையகப் தமிழ் உறவுகளைப் புலம்பெயரச் செய்துள்ளது. அவர்களுக்கான வாழ்விடங்களையும் வாழ்வாதாரங்களையும் உருவாக்க அரசு தவறினால் அவர்களை அரவணைத்துப் பாதுகாப்பதில் வடக்கு -கிழக்கு முன்னிற்கும். எப்பொழுதும் போலவே வடக்கு - கிழக்கு என்றும் மலையகத் தமிழர்களுக்குத் துணை நிற்கும்."

02

## இயற்கை அனர்த்தத்தால் நாட்டில் 410 வைத்தியசாலைகள் பாதிப்பு!

கொழும்பு, டிசெ. 14

சூறாவளியின் தாக்கத்தால் ஏற்பட்ட அனர்த்த நிலைமையால் இலங்கையில் 410 வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் அதிகபட்ச சேதங்கள் மகியங்கனை ஆதார வைத்தியசாலை மற்றும் சிலாபம் மாவட்ட வைத்தியசாலைக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் கூறியுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க,

நிலவிய அனர்த்த நிலைமை காரணமாக 500

15

## அரிசி பற்றாக்குறை ஏற்படாது!

கொழும்பு, டிசெ. 14

இயற்கை பேரிடர் காரணமாக இலங்கையில் நெற்செய்கை பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளபோதிலும் எதிர்வரும் ஆண்டில் அரிசி பற்றாக்குறை ஏற்படாதென ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் உணவு முறைகள் பிரிவின் தலைவரும் மூத்த ஆராய்ச்சியாளருமான டபிள்யூ.எம். துமிந்த பிரியதர்ஷன கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த ஆண்டு நவம்பர் மாத இறுதிவரை, இயற்கை அனர்த்தங்களால் 1 இலட்சத்து 8ஆயிரம் ஹெக்ரேயர் நெற்செய்கை முழுமையாக

02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர அரசாங்கத்தால் உதவிகள் திருடப்படாது

## ஓமல்பே சோபித தேரர் நம்பிக்கை



கொழும்பு, டிசெ. 14

சுனாமி நிவாரண உதவிகளைத் திருடிய ஆட்சியாளர்கள் இருந்ததாகவும், கொரோனா தொற்று நோயின் போது நண்பர்களுக்கு அண்டிஜென் பரிசோதனைகள் மூலம் திருட அனு மதித்ததாகவும் ஓமல்பே சோபித தேரர் குற்றம்சாட்டினார். எனினும், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் கிடைக்கும் உதவிகள் சரியாக விநியோகிக் கப்படும் என்று தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தலபத்திப்பிட்டிய சமூக சேவைகள் அறக்கட்டளை ஏற்பாடு செய்த கங்கொடவில சோம தேரரின் நினைவு விழாவில் பங்கேற்று அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில், அனர்த்த முகாமைத்துவத்தில் மிக உயர் நிலையில் இருப்பது பௌத்த விகாரைகளாகும். மறைந்த சோம தேரர் தான் நாட்டைக் காப்பாற்ற முன்னோடியாக இருந்தார்.

அவரது வழிகாட்டுதலின் கீழ், பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர எங்களால் முடிந்தது. இன்றும், சோம தேரர் எங்களுக்கு வழி காட்டுகிறார்.- என்றார். (எ)

# யாழில் கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக 2,313 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14

கடந்த சில நாட்களாக பெய்த கனமழை மற்றும் கடுமையான காற்று காரணமாக யாழ்ப்பாணத்தில் 735 குடும்பங்களைச் சேர்ந்த 2,313 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்தார்.

அந்த வகையில், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் கடுமையான காற்று காரணமாக ஒரு குடும்பத்தை சேர்ந்த 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் 472 குடும்பங்களைச் சேர்ந்த 1577 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் 2 குடும்பங்களைச் சேர்ந்த ஆறு பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 07 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் 105 குடும்பங்களைச் சேர்ந்த 304 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் நான்கு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் 137 குடும்பங்களைச் சேர்ந்த 357 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் 7 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் சூறாவளியால் 5 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (எ-05)

# பகிடிவதை குற்றச்சாட்டில் கைதான 19 பல்கலை மாணவர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம், டிசெ. 14

பகிடிவதை புரிந்த குற்றச்சாட்டில் கைதான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்கள் 19 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பல்கலைக்கழகத்துக்கு வெளியே உள்ள வீடொன்றுக்கு கனிஷ்ட மாணவர்களை அழைத்துச் சென்று தாக்குதல் நடத்தி பகிடிவதையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 19 மாணவர்கள் கடந்த மாதம் 29ஆம் திகதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

விளக்கமறியல் காலம் முடிவடைந்த பின்னர் நேற்று முன்தினம் மீண்டும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் ஆஜர்படுத் தப்பட்டனர்.

விசாரணைகளை முன்னெடுத்த மேலதிக நீதிவான் உசைன் சந்தேகநபர்கள் 19 பேரையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் ஆள் பிணையில் விடுவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனவரி மாதம் 24ஆம் திகதிக்கு வழக்கை தவணையிட்டு நீதி வான் உத்தரவிட்டார். (எ-03)

# பாரதியார் பிறந்தநாளையொட்டி யாழில் கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 14

மகாகவி பாரதியாரின் பிறந்தநாளையொட்டி தன்மீது பாரதியார் கவிதைகள் செலுத்திய செல்வாக்குகளை பாரதியும் நானும் என்ற பெயரில் வெண்பா மற்றும் விருத்தப்பாக்களில் கோவையூர்க் (கோப்பாய்) கவிஞர் திருமகள் குளோரியா ரூபா பாரதியும் நானும் என எழுதி வெளியீடு செய்கின்றார்.

இதன் வெளியீட்டு நிகழ்வு நாளை 15ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 03. 30 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி பிரதம விருந்தினராகவும் அமலமரித்தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்தந்தை ஜெயந்தன் பச்சேக் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நூலின் வெளியீட்டுரையை அருட்தந்தை செ. அன்புராசாவும் நயப்புரையை கவிஞர் விரிவுரையாளர் வேல் நந்தகுமாரும் ஆற்றுவர். (எ-05)

# பாராளுமன்றம் 18இல் கூடுகிறது

கொழும்பு, டிசெ.14

எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09. 30 மணிக்கு பாராளுமன்றம் கூடும் என அறிவிக்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பிரதமரின் வேண்டுகோளுக்கமைய, சட்டத்தரணி ஜகத் விக்ரமரத்னவால் நிலையியற் கட்டளை இலக்கம் 16இன் கீழ், கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம், பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு கடிதம் ஒன்றினூடாக, பாராளுமன்றத்தை அவசரமாகக் கூட்டுமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நிவாரண முயற்சிகளை விரைவுபடுத்துவதன் மூலம் பாராளுமன்றம் பொது மக்களுக்கான தனது பொறுப்பை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை நாமல் ராஜபக்ஷ தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த சில நாட்களாக நிலவும் அனர்த்த சூழ்நிலைகள் பல மாவட்டங்களில் பெருமளவிலான உயிரிழப்புகளையும், சொத்துக்களுக்கு சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(எ)

## மலையக...

- இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு: -

அண்மையில் முழு நாட்டையும் புரட்டிப் போட்ட டித்வா சூறாவளி, மலையகத்தை வழக்கம் போலவே சூறையாடிச் சென்றுள்ளது. நாளைய விடியல் குறித்தும் எதிர்காலம் குறித்தும் பல்வேறு கனவுகளுடனும் இருந்த ஏராளமானோரை நொடிப்பொழுதில் காவுகொண்டு மண்ணுக்கடியில் புதைத்தது. உறவுகள் இருக்கின்றார்களா?

அவர்கள் நலமுடன் இருப்பார்களா என்று ஏக்கப் பெரு மூச்சு விடும் நிலைக்கும் எதிர்பார்ப்புகளுடன் காத்தி ருக்கும் நிலைக்கும் இயற்கை அந்த மக்களை வஞ்சித்துள்ளது. இலங்கையில் தமிழனாக இருப்பவர்கள் அனைவரும் துன்பப்படத்தான் வேண்டுமோ என்று நினைக்கும் அளவுக்கு இம்முறை மலையகத் தமிழர்க ளையும் வடக்கு - கிழக்கு தமிழர்களையும் டித்வா புரட்டிப் போட்டுள்ளது.

இந்த டித்வா சூறாவளியால் மலையகத்தில் எழுநூறுக்கும் மேலான மக்கள் நிலச்சரிவுகளில் அகப்பட்டு மண்ணுக்குள் புதையுண்டு இறந்துள்ளனர்.

முன்னரும்கூட இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றாலும் இப்பொழுது இது மிகவும் பாரதூர மான அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக்குப் பாரிய அளவிலான அந்நியச் செலாவ ணியை ஈட்டித்தரும் பெருந்தோட்ட உறவுகள் 250 வருட ங்களாக சொந்த நிலமின்றி, சொந்த வீடின்றி, அல்லலுறும் நிலையையே இதுவரை நாங்கள் பார்த்து வருகின்றோம்.

இந்தப் பின்னணியில் இயற்கை அனர்த்தங்களால் அந்த மக்கள் தொடர்ச்சியாக தமது உயிரை அர்ப்பணித்து வருவதானது, ஏற்புடைய விடயமல்ல. ஆகவே, எமது பெருந்தோட்ட உறவுகளுக்கு இலங்கை அரசாங்கம், மலையகத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பான இடங்களை வழங்கி, இயற்கை அனர்த்தத்திலிருந்து அவர்கள் பாதுகாக் கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். அவ்வாறு இல்லாத பட்சத்தில் வடக்கு - கிழக்கில் அந்த மக்கள் குடியேறி வாழ விரும்புகின்ற சூழ்நிலையில், அதற் கான உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கத் தமிழ் மக்கள் தயாராகவே இருக்கின்றனர்.

மலையக உறவுகள் வடக்கு - கிழக்கில் குடியேற விரும் பும் பட்சத்தில் புலம்பெயர் தேசத்தில் வசிக்கின்ற மக்களின் காணிகளை மட்டுமன்றி, அவர்களின் தேவையின் அடிப்படையில் காணிகளை வழங்கி, அவர்கள் நிரந்தர மாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான நடவடிக்கை களை தமிழ் தரப்புகள் மேற்கொள்ளத் தயாராகவே இருக்கின்றனர்-என்றுள்ளது. (அ)

## ராஜபக்ஷர்கள்...

கடமைகளையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்., அமைதியிலும் ஒரு பொறுப்பு இருக்கிறது. அவர்கள் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்றனர்

இதில் யாரையும் ஒதுக்கி வைத்துக்கொண்டு யாரும் வேலை செய்ய முடியாது.

அனர்த்தப் பிரிவுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இடையில் ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும், முதலில் அதிகாரிகளை நாம் நம்பவேண்டும்.

இரு தரப்பினருக்கும் இடையே ஒரு புரிதல் இருக்கவேண்டும். அது நடந்திருந்தால், இந்த பிரச்னை ஏற்பட்டிருக்காது. பல பிரச்னைகளை கலந்துரையாடல் மற்றும் நல்லெண்ணம் மூலம் தீர்க்க முடியும். அதுதான் இப்போது குறைபாடு என்று நான் பார்க்கிறேன்.

ஒரு அனர்த்தத்துடன் அரசியல் செய்ய முடியாது. ஒரு அனர்த்தத்தின் போது, துன்பப்படுபவர்களை நாம் அனைவரும் கவனிக்கவேண்டாமா? அதற்குப் பிறகுதான் அரசியல் வரவேண்டும். அதனால்தான், நாம் விழுந்த இடத்திலிருந்து மீண்டு வர, நாம் அனைவரும் புரிதலுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று நினைக்கிறேன்-என்றார். (அ)

## அரிசி...

சேதமடைந்துள்ளது. இந்த சூழ்நிலையானது நெற்செய்கைக்கு ஏற்பட்ட சேதத்தைக் கருத்தில் கொண்டு, மொத்த நெல் உற்பத்தியில் ஒன்பது முதல் பன்னிரண்டு வீதம் வரை பாதிப்பு ஏற்படும்.

தற்போது பயிரிடப்படும் நிலத்தின் பரப்பளவையும் சேதமடைந்த நிலத்தின் பரப்பளவையும் கருத்தில் கொண்டால் இந்த பெரும்போகத்தில் 2.5 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி உற்பத்தியை எதிர்பார்க்கலாம்.


இதன்மூலம் உற்பத்தி நாட்டின் நுகர்வோர் தேவைகளில் குறைந்தது ஏழு மாதங்களுக்கு போதுமான அரிசியை உற்பத்தி செய்ய முடியும்.

அடுத்த ஆண்டு சிறுபோகம், மத்திய போகம் மற்றும் பெரும்போக உற்பத்திகளில் பாதிப்பு ஏற்படாவிடின் அரிசியை இறக்குமதி செய்யும் தேவை ஏற்படாது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏஐ தொழில்நுட்பங்களின் மூலம் உயிராபத்துகளை குறைக்கலாம்

## அமெரிக்க தூதரகத்தின் பிரதி தலைமை அதிகாரி



கொழும்பு, டிசெ. 14

ஏஐ உள்ளிட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, இலங்கையில் அனர்த்தங்களால் ஏற்படும் உயிர் ஆபத்துகளை குறைக்க முடியும் என இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் பிரதித் தலைமை அதிகாரி ஜேன் ஹொவெல் தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் புவியியல் தகவல் முறைமை ஆகிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட "GeoAI for Disaster Resilience" எனும் தேசிய திட்டத்தை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தும் நிகழ்வு கொழும்பில் உள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ஜேன் ஹொவெல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தத்தால் பலர் உயிரிழந்ததுடன், பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

எனவே, தொழில்நுட்பங்களின் உதவியுடன் இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே கண்டறிந்து உயிர்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட இந்தத் திட்டமானது சிறந்த தொரு முயற்சியாகும்.

இந்த திட்டமானது இலங்கையின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு மிகவும் பங்களிப்பு வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

செயற்கை நுண்ணறிவானது அனர்த்தங்களை முன்கூட்டியே கண்டறிவதற்காக பல நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையில் அனர்த்தங்களால் ஏற்படும் பாரிய சவால்களை முறியடிப்பதற்கு இந்த திட்டம் மிகவும் உதவும் என்று நாம் நம்புகிறோம்.

இந்த திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் அமெரிக்க தூதரகம் வழங்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து மழை பெய்யக்கூடும்

கொழும்பு, டிசெ. 14

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களில் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிராந்தியங்களின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். இப் பிராந்தியங்களின் சில இடங்களில் 50 மில்லிமீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைப் பிரதேசங்களின் கிழக்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அத்துடன் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு சுமார் 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் அடிக்கடி ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும்.

மத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காண ப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

புத்தளம் தொடக்கம் மன்னார், காங்கேசன்துறை, திருகோணமலை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டை சூழவுள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் வடகிழக்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

கொழும்பு தொடக்கம் புத்தளம், காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான அத்துடன் அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 50 - 55 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாகக் காணப்படும்.

நாட்டை சூழவுள்ள ஏனைய கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பல்கலை. சட்டத்தில் ஜனநாயகமற்ற மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ. 14

அரசாங்கம், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தில் ஜனநாயகமற்ற மற்றும் வெளிப்படைத்தன்மையற்ற வகையில் திருத்தத்தை அறிமுகப்படுத்த முயற்சிப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பல்கலைக்கழக கல்வியாளர்கள், நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கங்கள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் முறையான ஆலோசனைகள் இன்றி இத்தகைய ஒரு முக்கியமான மாற்றம் மேற்கொள்ளப்படக்கூடாது.

அதற்குப் பதிலாக, முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் குறித்து எந்தவொரு உத்தியோகபூர்வ உரையாடலும் அல்லது பொதுத் தெளிவும் இன்றி அரசாங்கம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

உயர்கல்வித் துறை ஏற்கனவே பதற்றங்களை எதிர்கொண்டுள்ள ஒரு நேரத்தில், பிரிவுகளுக்கான பொறுப்பதிகாரிகளை நியமிக்கும் தன்னிச்சையான அதிகாரத்தை துணைவேந்தருக்கு வழங்குவது அல்லது பல்கலைக்கழக சபைக்குள் அதிகாரத்தை மையப்படுத்துவது கடுமையான சிக்கல்களை உருவாக்கலாம்- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# இலங்கை - இத்தாலி சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தம் புதுப்பிப்பு

கொழும்பு, டிசெ. 14

இத்தாலி மற்றும் இலங்கைக்கு இடையில் சாரதி அனுமதிப் பத்திரங்களை பரஸ்பரம் அங்கீகரிப்பதற்கான இருதரப்பு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் நேற்று முன்தினம் இத்தாலியின் ரோம் நகரில் கையெழுத்திடப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தம் காலாவதியாகியிருந்த நிலையில், அது முதல் இரு நாடுகளின் மோட்டார் வாகனப் போக்குவரத்து அதிகாரிகளுக்கிடையில் ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது குறித்து இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் நிறைவுபெற்றதைத் தொடர்ந்து இக்கையெழுத்திடல் நடைபெற்றுள்ளது.

இந்தச் சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தின் மூலம், இரு நாடுகளிலும் நிரந்தர வதிவிடத்தைப் பெற்றுக்கொண்ட நபர்கள் தமது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை மாற்றிக் கொள்ள வசதி அளிக்கப்படுகிறது.

இதற்கமைய ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டதன் மூலம், குறித்த நாடுகளில் வசிக்கும் பிரஜைகள் 6 வருட காலப்பகுதிக்குள் எழுத்து மூல மற்றும் செய்முறைப் பரீட்சைகளுக்குத் தோற்றாமல் தமது சாரதி அனுமதிப்பத்திரத்தை மாற்றிக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகிறது.

5 வருட காலத்துக்குச் செல்லுபடியாகும் இந்த ஒப்பந்தம், இரு நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 60 நாட்களுக்குள் நடைமுறைக்கு வரும். ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததும் இரு தரப்பினரும் அது குறித்து அறிவிப்பார்கள் என வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# இக்கட்டான நேரத்தில் உதவும் இந்தியாவுக்கு தேரர்கள் நன்றி



கண்டி, டிசெ. 14

இக்கட்டான நேரத்தில் உதவும் இந்தியாவுக்கு மகாநாயக்க தேரர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.


இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, நேற்று முன்தினம் கண்டிக்கு பயணம் செய்து மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே சிறீ சித்தார்த்த சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரக்கா கொட சிறீ ஞானரத்ன தேரர் ஆகியோர், இலங்கை ஏதேனும் பிரச்னைக்கு முகங் கொடுக்கும் எந்த வொரு சந்தர்ப்பத்தி லும் இந்தியா உடன டியாக செயல்பட்டு தேவையான ஒத்துழை ப்பை வழங்குவது குறித்து தமது நன்றியை தெரிவித்தனர்.

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சந்தோஷ் ஜா, இலங்கைக்கு உதவி தேவைப்படும் இந்தத் தருணத்தில் இந்தியா மிகுந்த அக்கறையுடன் தலையிட்டு தேவையான ஒத்துழைப்பை வழங்கும் என்று குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கைக்கு தேவையான எந்த நேரத்திலும் ஒத்துழைப்பு வழங்க இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.(எ)

# அறநெறி பாடசாலை மாணவர்களின் பஞ்சபுராணம், பண்ணிசை கச்சேரி



யாழ்ப்பாணம், டிசெ. 14

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் சிறீ ல சிறீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்ற ஆறுமுக நாவலர் குருபூஜை விழாவில் நீர்வேலி சிறீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஞ்சபுராணம், பேச்சும் இணுவில் இளம் தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசைக் கச்சேரியும் நடைபெற்றன.(எ)

# மண்சரிவால் பாதிக்கப்பட்டோருக்கு மாற்றுக்காணி வழங்க அரசு திட்டம்

கொழும்பு, டிசெ. 14

"டித்வா" புயல் காரணமாக பாதிக்கப்பட்ட காணிகள் குறித்து கணக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு காணி ஆணையாளர் நாயக திணைக்களம் அவதானம் செலுத்தியுள்ளது.

இதற்கமைய, மண்சரிவுக்கு உள்ளான காணிகளைப் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக மாற்றிய பின்னர், அக்காணிகளை மீண்டும் அளவீடு செய்ய வேண்டும் என காணி ஆணையாளர் நாயகம் சந்தன ரணவீர ஆராச்சி தெரிவித்தார்.

இதன்போது, அபாய வலயங்களில் உள்ள காணிகளை பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக மாற்றத் தீர்மானித்தால், அனுமதிப்பத்திரம் கொண்ட அக்காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து நட்டஈடு அல்லது மாற்றுக் காணி ஒன்றை வழங்க காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் தயாராகவுள்ளது. இதற்கமைய, சம்பந்தப்பட்ட காணிகள் தொடர்பான தகவல்களை அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களிடமிருந்து கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சில குடியிருப்பாளர்கள் அரச காணிகளில் அத்துமீறித் தங்கியிருப்பதுடன், அவர்கள் தொடர்பாகவும் இந்த நடவடிக்கையை முன்னெடுக்க அத்திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

இது குறித்து ஏற்கனவே அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள காணி அலுவலகங்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாக காணி ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தத்தால் பொதுமக்களை விட எதிர்க்கட்சியினரே அதிகம் பாதிப்பு

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க விமர்சனம்



நுவரெலியா, டிசெ. 14

நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் பொதுமக்களை விட எதிர்க்கட்சியினரே அதிக மாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் இக்கட்டான நிலையில் இருக்கும் போது, களத்தில் இறங்கி அவர்களுக்கு உதவுவதை விடுத்து, சமூக வலைத்தளங்களில் விமர்சனம் செய்துகொண்டிருக்கின்றனர். எனவே, இனி யாவது மக்களுக்காக சேவை செய்ய முன்வாருங்கள் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா, கொத்மலை பகுதியில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட இடங்கள் மற்றும் சேதமடைந்த வீதிகளை நேரில் சென்று பார்வையிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை பகுதியில் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இதுவரை பிரதேச மக்கள், பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் அரசியல்வாதிகள் இணைந்து பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளனர்.

நாவலப்பிட்டி - கம்பளை பிரதான வீதி மண்சரிவால் கடுமையாக சேதமடைந்துள்ளது. இதனால் ரயில் பாதையின் சுமார் 200 மீற்றர் தூரம் பாதிக்கப்பட்டுள்ளது. அதனைச் சீர்செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இன்னும் மூன்று தினங்களில் இவ்வீதி போக்குவரத்துக்காக திறக்கப்படும்.

வீதிச் சேதத்தால் மக்கள் சுமார் 750 மீற்றர் தூரம் நடந்து சென்றே பேருந்துகளைப் பிடிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

கடந்த 25 முதல் 50 ஆண்டுகளாக மக்கள் தவறான முறையில் வழிநடத்தப்பட்டுள்ளனர். ஆறுகள் மற்றும் கால்வாய்களை மறித்து கட்டுமானங்களை மேற்கொண்டால் பாரிய நட்டஈடுகளைச் செலுத்த வேண்டியேற்படும். எனவே, இனிவரும் காலங்களில் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்வதே எமது முக்கிய நோக்கம் - என்றார். (எ)

# அவசர கால சட்டத்தில் தேவையற்ற விதிமுறைகளை உள்ளடக்கியதேன்?

## ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் கேள்வி



கொழும்பு, டிசெ. 14

நவம்பர் மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட அவசர கால சட்டத்தில் தற்போதைய இடர் நிலைமைக்கு பொருத்தமில்லாத விதிமுறைகள் காணப்படுகின்றன. கடந்த காலத்தைப் போன்று அந்த ஏற்பாடுகளை உள்ளீர்த்து சட்டத்தை அமுலாக்கியமைக்கான காரணம் என்ன? என்று ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் நிலவிய பேரிடர் சூழலில், ஆட்சியமைப்பு, மனித உரிமைகள் மற்றும் நிறுவக சுவாலகள் போன்றவற்றை வழிநடத்துவது தொடர்பில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஏற்பாடு செய்த கலந்துரையாடலொன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், நாட்டை உலுக்கியுள்ள டித்வா புயலை அடுத்து நிவாரணம், உடனடி செயல்பாடு, மறுசீரமைப்பு மற்றும் மீள்கட்டமைப்பு ஆகிய அனைத்தும் உடனடியாக கவனம் பெற வேண்டிய முன்னுரிமை பிரச்னைகளாகும்.

பேரிடர் சூழ்நிலைகளான வெள்ளம், நிலச்சரிவு, புயல் உள்ளிட்ட இயற்கை அபாயங்களை நிர்வகிக்க 2025 நவம்பர் 28 ஆம் திகதி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் நாடு முழுவதும் பொது அவசர கால நிலை அறிவிக்கப்பட்டது.


இந்த அனர்த்தத்தின் விசேடமான சூழ்நிலையில் அவசர கால நிலை அறிவிப்பு அவசியமானது எனக்கருதினாலும், வெளியிடப்பட்டுள்ள குறிப்பிட்ட அவசர கால சட்டம் கடுமையான கேள்விகளை எழுப்புகின்றன.

முன்னைய காலங்களில் பயன்படுத்தப்பட்ட பரந்த விரிவுடைய ஏற்பாடுகள் காணப்பட்ட உள்ளடக்கத்தின் சாரத்தை மீண்டும் பிரதிபலிப்பதோடு, பேரிடர் முகாமைத்துவம், நிவாரணம் அல்லது மீள் கட்டமைப்பு ஆகியவற்றுடன் தொடர்பில்லாத பரந்த அதிகாரங்களையும் வழங்குகின்றன.

இந்த சட்டத்தின் பெரும்பாலான விதிமுறைகள் குற்றவியல் செயல்களுடன் தொடர்புடைய விதிமுறைகளாக இருப்பதானது, அவை இப்பேரிடர் சூழ்நிலைக்கு பொருத்தமா? என்பதையும் அதன் தேவையையும் பற்றிய கேள்விகளையும் உருவாக்கியுள்ளது.

அமுலாக்கப்பட்டுள்ள சட்டத்தின் சில குற்றப்பிரிவுகள் முந்தைய அவசர காலநிலை சட்டங்களில் இருந்தவை போன்று அளவுக்கு மீறிய மற்றும் நியாயமற்ற பிரிவுகளுடன் ஒத்துப்போகின்றது. இது தற்போதைய சூழலை பொருட்படுத்தாமல், முந்தைய விதிமுறைகளின் சில பகுதிகள் நேரடியாக பிரதியெடுக்கப்பட்டுள்ளனவா என்ற சந்தேகத்தை உருவாக்கியுள்ளது - என்றார். (எ)

# 1,740 கிலோ பீடிஇலைகள் சிலாபத்தில் கைப்பற்றல்



சிலாபம், டிசெ. 14

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சுமார் 1,740 கிலோ கிராம் பீடி இலைகளை சிலாபம் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் சிலாபம் கடற்பகுதியில் கடற்படையினர் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுகத்தில் உள்ள சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ)

# வெளிநாட்டு பணவனுப்பல் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 14

இலங்கைக்கு கிடைத்த வெளிநாட்டு பணவனுப்பல் கடந்த நவம்பர் மாதத்தில் 673. 4 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் மொத்த பணவனுப்பல் 7. 19 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 20. 7 சதவீத வளர்ச்சியாகும் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

## காலி துறைமுக பகுதியில்

# கார் மோதி பாதசாரி பலி!

காலி, டிசெ. 14

காலி துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகொல்ல மீன்பிடி துறைமுகத்துக்கு எதிரே கார் ஒன்று பாதசாரி மீது மோதி விபத்துக்குள்ளானதில் பாதசாரி உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. காலி நோக்கி பயணித்த கார் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளான தாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது பலத்த காயமடைந்த பாதசாரி, கராப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அம்பலாங்கொடை, வத்துகெதர பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. சடலம் கராப்பிட்டிய மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். காலி துறைமுக பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## சுதந்திர கட்சியின்

# சிரேஷ்ட உப தலைவராக விஜயதாஸ

கொழும்பு, டிசெ. 14

முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் காலப்பகுதியில் கூடவுள்ள கட்சியின் நிறைவேற்றுச் சபையில் குறித்த நியமனம் வழங்கப்படும் என்று சுதந்திர கட்சியின் தலைவர் நிமல் சிறிபாலடி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட தலைவராகவும், மஹரகம தொகுதி அமைப்பாளராகவும் பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.(எ)

# மர ஆலையில் தீ பரவல்

கொழும்பு, டிசெ. 14

மொரட்டுமுல்ல, வில்லோரவத்தை பிரதேசத்தில் உள்ள மர ஆலை ஒன்றில் தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இந்த தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவை மாநகர சபையின் தீயணைப்பு படையினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீ பரவலை கட்டுப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

எவ்வாறிருப்பினும் தீ பரவலின் போது உயிர் ஆபத்துகள் எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# டெங்கு நோய் பரவும் வாய்ப்புள்ள 5 மாவட்டங்கள் குறித்து அவதானம்

## தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு

கொழும்பு, டிசெ. 14

எதிர்காலத்தில் டெங்கு நோய் பரவக்கூடிய ஐந்து மாவட்டங்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணம், கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடும். இது குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். எதிர்காலத்தில் நோய் மிகப்பெரிய அளவில் பரவும் காலமாக மாறக்கூடும். டெங்கு அதிகரித்தால், அது மரத்திலிருந்து விழுந்த மனிதனை மாடேறி மிதிப்பது போன்றதற்கு இணையான தாகும்.

எதிர்வரும் நாட்களில் வரவிருக்கும் பருவமழை நாட்டில் டெங்கு நோய் பரவலை மிக அதிகமாக்கும். எனவே, அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை பொது சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதுதவிர, டெங்கு ஒழிப்புக்கு இலங்கை செஞ்சிலுவை சங்கம் ஆதரவு வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
14.12.2023 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# மாகாண சபைத் தேர்தலை ஆராயும் குழு?

மாகாண சபைத் தேர்தலை எந்த முறையில் வைப்பது பொருத்தமானது என்பதை ஆராய்வதற்காக பாராளுமன்ற குழுவொன்று நியமிக்கப்பட வுள்ளது- இந்த செய்தி சொல்வது என்ன? அரசாங்கம் உண்மையில் தேர்தலை நடத்த விரும்புகின்றதா அல்லது காலத்தை நீட்டிக்கொண்டு செல்ல விரும்புகின்றதா?

மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். அதனை தொடர்ந்தும் பிற்போடுவதானது ஒரு ஜனநாயகமீறல். தொடர்ந்தும் பிற்போட்டால் அரசாங்கத்திற்கான உதவிகளை இழக்க நேரிடும் என்றவாறான எந்தவொரு அழுத்தமும் அரசாங்கத்தின் மீதில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தலை நடத்த வேண்டும் என்னும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லாதிருந்தால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை - மாறாக தேர்தலை நடத்த வேண்டும் என்று எண்ணினால்தான் ஆச்சரியப்பட வேண்டும்.

தமிழ்ச் சூழலில் அரசியலை எடுத்து நோக்கினால் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் உண்மையிலேயே அக்கறை இருக்கின்றதா என்னும் கேள்வியுண்டு. வேறு வழியின்றி மாகாணசபைத் தேர்தலை நடத்துங்கள் என்று தமிழ் கட்சிகள் கூறினாலும் கூட, அதில் உண்மையான ஈடுபாட்டுடன், அதன் தேவையை முழுமனதாக உணர்ந்து ஒருங்கிணைந்து செயற்படும் நிலைமையை தமிழர் பக்கத்தில் காண முடியவில்லை.

இப்போதும் கூட, சமஸ்டி மற்றும் புதிய அரசியல் யாப்புக் கதைகளை காவித் திரிவதில் மகிழ்வுறும் வியாதிதான் மேலோங்கியிருக்கின்றது. இந்த வியாதிக்கு மருந்தில்லை ஏனெனில் அரசியல் அனுபவங்கள் எதிர்மாறாக இருந்த போதிலும் கூட நிலைமைகளை புரிந்துகொண்டு மாகாண சபைத் தேர்தலுக்காக ஒன்றுபட்டுச் செயற்படும் போக்கை காணமுடியவில்லை.

இந்தப் பின்புலத்தில் இலங்கை தமிழரசு கட்சி மாகாண சபைத் தேர்தலை வலியுறுத்தி மக்கள் இயக்கமொன்றை ஆரம்பிக்கப் போவதாக கூறியிருப்பது நல்ல செய்திதான். ஆனால் அதனை முறையாக நேர்த்தியாக முன்னெடுப்பார்களாக என்பதும் அடுத்த கேள்வி.

ஏனெனில் மாகாண சபைத் தேர்தல் பற்றி பேசினால் அத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். அதனை ஒரு ஜனநாயகக் கோரிக்கையாக முன்வைக்க வேண்டும் அவ்வாறில்லாது மாகாண சபைத் தேர்தலையும் பேசிக் கொண்டு புதிய அரசியல் யாப்புக் கதைகளையும் காவித் திரிந்தால், அது எந்தவொரு பயனையும் தராது. மேலும், அது அரசாங்கத்திற்கே வாய்ப்பாகும் ஏனெனில் புதிய அரசியல் யாப்பு வந்த பின்னர் தேர்தலுக்கு செல்லலாம்தானே என்று அரசாங்கம் வாதிட முடியும்.

அரசாங்கம் பாரியதொரு அழுத்தம் இல்லாமல் தேர்தலை நடத்தப் போவதில்லை என்பதை ஊகிக்க முடிகின்றது. தற்போது நாடு எதிர் நோக்கியுள்ள நெருக்கடிநிலையில் அரசாங்கத்தின் கையே ஓங்கியிருக்கின்றது. மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று ஒரு அழுத்தத்தை பிரயோகிக்கக்கூடியதொரு நாடு என்றால் அது இந்தியா மட்டும்தான். ஆனால் தற்போதைய சூழலில் அவ்வாறான அரசியல் நிலைமையும் தற்போது இல்லை.

# பெரும் எரிபொருள் நிறுவனங்களே காலநிலை நெருக்கடிக்கு காரணம்!

## கிரீன்பீஸ் தென்னாசியா சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 13

பெரும் எரிபொருள் நிறுவனங்கள் காலநிலை நெருக்கடிக்கு காரணமாக இருந்தாலும், இலங்கை போன்ற ஏழை நாடுகள் அதனால் மிகுந்த பாதிப்பை எதிர்கொள்கின்றன என்று கிரீன் பீஸ் தென்னாசியா தெரிவித்துள்ளது.

சமீபத்தில் உலக வானிலை அத்தியாய ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட அவசர ஆய்வில், மனிதனால் உண்டான காலநிலை மாற்றம், டித்வா புயலின்போது இலங்கையில் பெய்த கடுமையான மழையை மேலும் தீவிரமாக்கியதையும், மலாக்கா நீரிணையில் வெள்ளத்தை ஏற்படுத்தியதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆய்வின்படி, டித்வா போன்ற ஐந்து நாள் மழை வீழ்ச்சியானது தற்போது 28 வீதம் முதல் 160 வீதம் வரை அதிக தீவிரம் அடைந்துள்ளது. இது, உலகளாவிய சூழல் வெப்பமயமாக்கலால் உருவான 1.3 பாகை செல்சியஸ் வெப்பநிலையால் ஏற்பட்டது. வட இந்திய கடல் மேற்பரப்பு வெப்பநிலை 1991 - 2020 சராசரி அளவைவிட 0.2 பாகை செல்சியஸ் அதிகம் உள்ளது. இது புயல் வேகமாக வலுப்பெறவும் மற்றும் கன மழையினை ஏற்படுத்தவும் கூடுதல் சக்தியை வழங்கியுள்ளது.

வானிலை அத்தியாய ஆய்வு நிறுவன ஆராய்ச்சியாளர்கள், இலங்கையின் முன்னிருந்த பாதிப்பு நிலைகள் இந்த பேரிடரின் தாக்கத்தை அதிகரித்ததாக குறிப்பிட்டுள்ளனர்.

உயரமான மலைப்பாங்குகள் மழைநீர் பெரும்பாலான மக்கள் வாழும் வெள்ளப் பிரதேசங்களுக்கு சென்று சேர்க்கிறது, திட்டமிடப்படாத நகர வளம் வெள்ளப் பிரதேசங்களில் மக்கள் பாதிப்பை அதிகரிக்க செய்துள்ளது. தகவல் தொடர்பு அமைப்புகளின் தோல்விகள், முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் பலருக்குப் போகாத காரணமாக, குறைந்த வருமானம் மற்றும் சமூக எல்லைப்பட்ட மக்கள் போக்குவரத்து, மின்சாரம் மற்றும் அத்தியாவசிய சேவைகளில் ஏற்பட்ட சேதத்தை நேரடியாக அனுபவிக்கவேண்டி நிலைக்கு தள்ளப்பட்டனர்.

கிரீன்பீஸ் தென்னாசியாவின் துணை இயக்குநர் அவிநாஷ் சாஞ்சல் கூறுகையில்-

டித்வா புயலின்போது மக்கள் ஒன்றுகூடி உதவி செய்தனர். அயலவர்கள் அயலவர்களை காப்பாற்றினர். தன்னார்வலர்கள் இரவு முழுவதும் உழைத்தனர். ஆனால், சாதாரண இலங்கையர்கள் ஒன்றாக போராடியபோதும், அழிவின் உண்மையான காரண கர்த்தாக்கள் எங்கேயும் தென்படவில்லை. வானிலை அத்தியாய ஆய்வு நிறுவனத்தின் ஆய்வு இதனை உறுதிப்படுத்துகிறது. இந்த பேரிடரை உலகின் மிகப் பெரும் எரிபொருள் நிறுவனங்கள் உருவாக்கிய கார்பன் மாசுபாடு தீவிரப்படுத்தியுள்ளது. பேரிடருக்கு காரணமானவர்கள் அவர்களே. ஆனால் விளைவுகளை முன் வரிசை சமூகங்கள் எதிர்கொள்கின்றன- என்றார்.

டித்வா போன்ற நிகழ்வுகள் இந்தப் பிராந்தியத்திற்கு புதிய அபாயமான நிலை என கிரீன்பீஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)

# விமானப்படையின் உதவி தொடர்கிறது

கொழும்பு, டிசெ. 13

சீரற்ற வானிலை காரணமாக நாட்டில் பல பிரதேசங்கள் வெள்ளம் மற்றும் மண் சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை இலங்கை விமானப்படை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் நேற்று முன்தினம் ஹிங்குராக்கொட விமானப்படை தளத்தைச் சேர்ந்த இல 07 படைப்பிரிவின் பெல் 212 ஹெலிகொப்டர் மூலம் மீமுற பிரதேசத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பகுதி வைத்தியசாலையின் வைத்தியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலதிக சிகிச்சைக்காக கர்ப்பிணித்தாய் ஒருவர் அவருடைய சிறு குழந்தை மற்றும் கணவருடன் பாதுகாப்பாக ஹிங்குராக்கொட விமானப்படைத் தளத்துக்கு கொண்டுவரப்பட்டனர். (அ)

# முல்லைத்தீவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவு பொதி வழங்கல்

முல்லைத்தீவு, டிசெ. 14


முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கன மழை காரணமாக கரைதுறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, வெலிஓயா ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இவ்வாறு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன.

மேலும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதன் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொதிகளை வழங்கினார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வத்துப் பயனே ஈதல்!

அருணன் கபிலன்

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பது தமிழர்களின் வாழ்வியல் மொழி. ஆனாலும், தாங்கள் தேடிய திரவியங்களை ஒருபோதும் தமிழர்கள் பதுக்கியதில்லை. தனக்கென்று மட்டும் வைத்துக் கொண்டதுமில்லை. அண்மைக்காலமாக அதாவது தமிழர்களின் வாழ்வில் ஏற்பட்டிருக்கும் மிகப் பெரிய மாற்றம் சொத்துக் குவித்தல் என்னும் வழக்கம் இது தமிழர்களின் மரபன்று.

தேடித் தேடிப் பொருளைக் குவிப்பதும் அவ்வாறு குவிந்தவற்றைக் கொண்டு மேலும் மேலும் அதைப் பெருக்குவதற்கான வழிகளில் ஈடுபடுவதும் குறிப்பாக மண்ணிலும் பொன்னிலும் அதை முதலீடு செய்வதும் இதுபோன்ற பல முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுவதும்தான் வாழ்க்கையின் குறிக்கோள் என்று கருதிக் கொண்டிருக்கிற காலமாக இருக்கிறது.

வாழ்வுக்கான அகப்பொருள் தேடிக் கண்டு தேர்ந்து உலகுக்கே உரக்கச் சொன்ன தமிழர்கள் தாங்களே அந்த மெய்ப்பொருளை மறந்துவிட்டுப் பொய்ப் பொருளை நாடி - புறவாழ்வுக்குப் பொருள் தேடி அலைகிறார்களோ என்ற ஐயமும் தோன்றுகிறது.

இதிலே வேடிக்கை என்னவென்றால், வேண்டுதல்-வேண்டாமை இலானாகிய கடவுளையும் இதற்குப் பங்கு சேர்த்துக் கொள்வதுதான். இந்தக் கோயிலில் இத்தனை முறை இப்படி வேண்டிக் கொண்டால் செல்வம் கொட்டோ கொட்டென்று கொட்டும் என்று வேண்டுகிறவர்கள் நம்புகிறார்கள். அவ்வாறு வேண்டிச் செல்வத்தைச் சேர்த்தவர்கள் தாங்கள் சேர்த்த செல்வத்துக்குக் காரணம் அந்தக் கடவுள்தான் என்றும், ஏதும் பழி-பாவம் வந்து விடக் கூடாது என்பதற்காக அதில் ஒரு பங்கை கடவுளுக்கே கொடுத்து விட்டால் எல்லாம் சரியாகி விடும் என்றும் நம்புகிறார்கள்.

பொருட் செல்வத்துக்காகவே மட்டும் அலையும் இந்த வாழ்க்கையில் அன்பு, கருணை, நிம்மதி, உடல்-மனநலம், நீளாயுள், சமூக மதிப்பு, மானுட நேயம் உள்ளிட்ட பலவற்றை இழப்பதோடு மட்டுமின்றித் தாங்கள் சேர்த்த செல்வத்தைச் செலவழித்து மீண்டும் இவற்றை



யெல்லாம் பெற்று விடலாம் என்று நம்புவதுதான் அதை விடவும் வேடிக்கையாக இருக்கிறது.

கனியைக் கனியாகச் சுவைக்காது கனியென்று எழுதி வைத்த காகிதத்தைச் சுவைப்பது போலத்தான் இந்தச் சொத்துக் குவிப்பு வாழ்க்கையும்.

"உண்பது நாழி, உடுப்பவை இரண்டே" என்று வாழ்க்கையின் எளிமையை அழகாகக் குறிப்பிடுகிற சங்க இலக்கியம் அதனை மேலும் விரிவாக்குகிறது.

"இந்த உலகம் முழுவதும் பொதுமை யானதில்லை. தனி ஒருவனாகிய எனது உரிமையே" எனக் கொக்கரித்து, ஒரு குடைக்கீழ் ஆளும் அரசனாகவே இருந்தாலும், பகலிரவு உறங்காது ஓடித்திரியும் விலங்குகளை வேட்டையாடினால்தான் வயிற்றுக்குக் கிடைக்கும் என்று காத்திருக்கும் கல்லாத வறுமையாளனுக்கும் உணவுக்குப் பயன்படும் அளவு நாழித் தானியம்தான் மானத்தின் பொருட்டு உடலை மறைக்கும் ஆடைகள் அரையாடை என்றும் மேலாடை என்றும் இரண்டேதான்! இவைபோலும் பிற உடல் சார்ந்த உள்ளம் சார்ந்த தேவைகளும் பொதுவாகவே விளங்கும். நிலைமை இப்படியிருக்க, தேடிக் குவிக்கிற செல்வத்தின் பயன்தான் என்ன என்று கேட்டால், "நாமே எல்லாவற்றையும் அனுபவிப்போம்" என்று கருதாது, அற்பக் கைப்பொருளும் இல்லாமல் வாடுகிற வறியவர்களுக்கு மனமுவந்து பகிர்ந்து கொடுத்தல்தான் என்கிறது புறநானூற்றுப் பாடல்.

இந்த உரத்த சிந்தனை நயத்தகு சொற்கள் அமைந்த பாடலோடு மட்டும் முடிந்துவிடவில்லை. வளத்தகு வாழ்வியலாகவும் திகழ்ந்தது என்பதைச் சங்க இலக்கியங்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

வறுமையில் வாடிய புலவர் பொருள்வேண்டி வள்ளலிடம் தன் துயரைப் பாடலாக்கிக் கூறுகிறார். வாழ்நாள் கடந்து நிறைமுதுமை அடைந்த என் தாய் இன்னும் உயிர் பிரியவில்லையே என நொந்து நரை மயிர் பரவத் தடியூன்றித் திரிய முடியாதவளாகத் துயரத்தில் இருக்கிறாள்.

இளம்கைக்குழந்தையை ஏந்திப் பசியோடு தவிக்கிறாள் மனைவி. குழந்தைக்கு அமுதூட்டும் அவள் மார்பு வற்றிக் கிடக்கிறது. முற்றாத குப்பைக் கீரையைப் பறித்தெடுத்து நீருலையில் இட்டு உப்போ மோரோ, சோறோ, ஏதுமின்றி, பிள்ளையின் பாலுக்காக வேண்டி வெறுமனே உண்கிறாள். அவளுக்கு மாற்றுடையும் இல்லை. இருப்பதுவும்கூடக் கிழிந்து அழுக்கேறியது. இவ்விரு மகளிர் வேண்ட நான் உன்னிடம் பொருள் வேண்டி வந்தேன் அவர்கள் மகிழும் படி பரிசில் தரவேண்டும்" என்று வேண்டுகிறார்.

எத்தகைய கொடிய வறுமை அவரைப் பற்றியிருக்கிறது என்பதை அந்தப் பாடல் வரிகளே படம் பிடித்துக் காட்டி நம் நெஞ்சை உருக்குகின்றன. வள்ளல் மனம் உருகாதா என்ன? அவரும் பெருங்கொடையை வாரி வழங்கினார்.

இத்தனை வறுமையில் சிக்கித் தவித்த அந்தப் புலவருக்கு இப்போது குன்றனைய செல்வம் குவிந்து விட்டது. ஓடப்பராய் இருந்த ஏழைப்புலவர் வள்ளலின் கொடையால் ஓர் விநாடிக்குள் உயரப்பர் ஆகி விட்டார்.

புலவர் தனக்குப் பரிசாய்க் குவிந்த அந்தப் பெருஞ் செல்வத்தைக் கொண்டு ஏழு தலைமுறைக்கும் இறுமாந்து வாழ்ந்திருக்கலாம் அல்லவா? ஆனால், பரிசில் பெற்றுத் திரும்பிய அவர்தம் தமிழுள்ளம் தன்னுடைய மனைவியை அழைத்து, "மனையாளே, உன்னை விரும்பியவர்களுக்கும், உனக்கு விருப்பமானவர்களுக்கும் நம்மைப் போல வாழ்வோர்க்கும் உனது சுற்றத்தார்க்கும் இதுநாள்வரை நமது வறுமைதீர நமக்குப் பொருள் கொடுத்து உதவியவர்களுக்கும், இவர்கள் மட்டுமின்றி இன்னார் இனியார் என்று கருதாமல், என்னைக் கேட்டு என்னுடைய

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 14.12.2025 - 20.12.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - கார்த்திகை 28
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : தசமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நன்மை உண்டாகும் எடுத்த வேலை வெற்றியாகும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தடைபட்ட வேலை முடியும். குடும்ப நெருக்கடி குறையும். பெரியோரின் ஆதரவு கிடைக்கும். புதன் வியாழனில் வேலைகளில் விழிப்புணர்வு அவசியம். தம்பதிக்குள் ஏற்பட்ட சண்டை சச்சரவு விலகும். லாப ராகுவும் சனியும் வருமானத்தை அதிகரிப்பர். வியாபாரம் முன்னேற்றம் அடையும். செல்வாக்கு வெளிப்படும். அதிர்ஷ்ட வாய்ப்பு தேடி வரும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

திங்கள் வரை சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சூரியனால் உங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி முடியும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். இழுபறியாக இருந்த வேலை முடியும். குடும்பத்தில் இருந்த நெருக்கடி நீங்கும். தம்பதிக்குள் இணக்கம் அதிகரிக்கும். அதிர்ஷ்ட வாய்ப்பு தேடிவரும். எடுத்த வேலை முடியும். பொன் பொருள் சேரும். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். எடுக்கும் வேலைகளில் நிதானம் தேவை. உடல்நிலையில் அவ்வப்போது ஏதேனும் பாதிப்பு ஏற்படும். ஒரு சிலர் அதிகாரியின் கோபத்திற்கு ஆளாவீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

செவ்வாய் நெருக்கடியை ஏற்படுத்துவார் என்றாலும், திங்கள் வரை சூரியனால் நினைத்ததை சாதிப்பீர். தொழிலில் ஏற்பட்ட தடை விலகும். இழுபறியாக இருந்த விவகாரம் முடியும். உடல்நிலையில் தோன்றிய பாதிப்பு விலகும். சனி, ராகு, கேது என மூவரும் செல்வாக்கை உயர்த்துவர். முயற்சிகளை வெற்றியாக்குவர். செய்துவரும் தொழிலில் லாபம் அதிகரிக்கும். புதிய சொத்து சேரும். வாழ்வில் வளம் உண்டாகும். குடும்பத்தில் நிம்மதி இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். அதிர்ஷ்ட வாய்ப்பு தேடி வரும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

குரு வக்ரம் அடைந்து இருப்பதால் செலவு அதிகரிக்கும். ஒவ்வொரு வேலையையும் போராடி முடிக்க வேண்டியதாக இருக்கும். தேவையற்ற அலைச்சல் ஏற்படும். உடல்நிலையில் பாதிப்பு உண்டாகும். சனி, ராகு சோதனைகளை தந்தாலும், செவ்வாய் பகவான் அருளால் சங்கடங்கள் யாவும் விலகும். நினைத்ததை சாதிக்க முடியும். உடல்நிலை சீராகும். எதிர்ப்பு விலகும். புதனும் சுக்கிரனும் திட்டமிட்டு செயல்பட வைப்பர்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

கேது, ராகு, சனி என மூவர்களால் சங்கடம் உண்டாகும். குடும்பத்தில் எதிர்பாராத நெருக்கடி தோன்றும். செயல்களில் சங்கடம், உடல்நிலையில் பாதிப்பு ஏற்படும். எச்சரிக்கை அவசியம். சுக்கிரன், புதனும் புத்திசாலித்தனத்தை அதிகரிப்பர். முயற்சிகளை வெற்றியாக்குவர். பொன் பொருள் சேர்க்கையை உண்டாக்குவர். தம்பதிக்குள் அன்பை அதிகரிப்பர். பணப்புழக்கத்தை ஏற்படுத்துவர். புதிய வாகனம் வாங்குவீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

சகாய ஸ்தானத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் எடுக்கும் முயற்சி வெற்றியாகும். நினைத்த வேலை நடக்கும். அதிர்ஷ்ட வாய்ப்பு தேடி வரும். அரசுவழி வேலைகளில் லாபம் உண்டாகும். சனி, ராகு பகவானால் செல்வாக்கு உயரும். உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்களும் மனம் மாறுவர். அதிர்ஷ்ட வாய்ப்புகளால் உங்கள் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் அடையும். வருமானம் அதிகரிக்கும். செவ்வாய் பகவானால் உழைப்பு அதிகரிக்கும். கடும் முயற்சிக்குப்பின் எடுத்த வேலை வெற்றியாகும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இதுவரை தடைபட்டிருந்த வேலைகளை செவ்வாய் பகவான் நடத்தி வைப்பார். புதிய சொத்து சேரும் பணப்புழக்கம் அதிகரிக்கும். எடுக்கும் வேலை வெற்றியாகும். ராகுவும், சனியும் நெருக்கடிக்கு ஆளாக்குவர். இருந்தாலும் கேது உங்கள் நன்மையை வழங்குவார். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். சிலருக்கு புதிய ஒப்பந்தம் கிடைக்கும். குரு வக்கிரத்தினால் வேலையில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். எதிர்பார்த்த லாபம் வரும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

பாக்ய குருவால் வேலைகளில் கவனம் தேவை. பண விவகாரத்தில் எச்சரிக்கை அவசியம். வியாபாரிகள் முதலீட்டில் கவனமாக இருப்பது நல்லது. உடல்நிலையில் கூடுதல் கவனம் தேவை. சனியும் ராகுவும் உழைப்பை அதிகரிப்பர். உடல்நிலையில் ஏதேனும் ஒரு பாதிப்பு ஏற்படும். சுக்கிரன் ராசிக்குள் சஞ்சரிப்பதால் தேவைக்கேற்ற பணம் வரும். நெருக்கடி நீங்கும். எதிர்பார்த்த பணம் வரும். நெருக்கடி நீங்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

கேது, ராகு, சனி பகவான் மூவரும் எடுக்கும் முயற்சியில் வெற்றியை உண்டாக்குவார். வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். வியாபாரிகளுக்கு பணியாளர் ஒத்துழைப்பு கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். உங்கள் லாபாதிபதி சுக்கிரன் 12 ல் சஞ்சரிப்பதால் செய்துவரும் தொழில் முன்னேற்றம் அடையும். வருமானம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் ஏற்பட்ட சங்கடம் நீங்கும். பொன் பொருள் சேரும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

லாப ஸ்தானத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் வியாபாரம் தொழில் முன்னேற்றம் அடையும். அரசுவழி முயற்சி சாதகமாகும். வரவு அதிகரிக்கும். வேலையில் இருந்த நெருக்கடி நீங்கும். அஷ்டம ஸ்தானத்தில் கேது, இரண்டாமிடத்தில் சனி, கேது சஞ்சரிப்பதால் உடல்நிலையில் கூடுதல் கவனம் தேவை. ஒரு சிலருக்கு மறைமுக எதிரிகளால் எதிர்பாராத சங்கடங்கள் நெருக்கடிகள் ஏற்படும். பண வரவில் தடை உண்டாகும். நிதானம தேவை.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

செவ்வாய் பகவான் உங்களுக்கிருந்த நெருக்கடியை போக்குவார். செய்து வரும் தொழிலில் லாபம் அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலை நடக்கும். உத்தியோகத்தில் இருந்த நெருக்கடி நீங்கும். வெள்ளி சனிக்கிழமைகளில் புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. ராசிக்குள் சனி ராகு சஞ்சரித்தாலும், சூரியனும் செவ்வாயும் சாதகமாக சஞ்சரிப்பதால் வேலையில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த மாற்றம் கிடைக்கும். பண வரவில் ஏற்பட்ட தடை விலகும். புதிய சொத்து சேரும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

குரு வக்கிரத்தினால் வேலைகளில் நிதானம் தேவை. யோசிக்காமல் எதிலும் ஈடுபட வேண்டாம். செவ்வாய்க்கிழமை முதல் சூரியன் முன்னேற்றத்தை உண்டாக்குவார். தொழிலில் லாபத்தை அதிகரிப்பார். திங்கள் கிழமை திட்டமிட்டு செயல்படுவது நல்லது. கேதுவும், சுக் கிரனும் செல்வாக்கை உயர்த்துவர். எதிர்ப்பு, போட்டி என்றிருந்த நிலையை மாறும். வழக்கு சாதகமாகும். உடல்நிலையை சீராக்குவர். எடுக்கும் வேலைகளை வெற்றியாக்குவர். திங்கள் செவ்வாயில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அவசர அவசரமாக சில வேலைகளில் இறங்கி சங்கடத்திற்கு ஆளாவீர். வேலைகளில் லாபம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனால்ட் ட்ரம்பின் போரும் சமாதானமும்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கடந்த மே மாதத்தில் மூண்ட போரை நிறுத்தியது தானே என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இடையறாது கூறிவருகிறார். இரு நாடுகளினதும் இராணுவ உயர்மட்டங்களில் இடம்பெற்ற தொடர்பாடல்களை அடுத்தே அன்று மோதல்களை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக புதுடில்லி திட்டவட்டமாக கூறிவருகின்ற போதிலும், ட்ரம்ப் அதைப் பொருட்படுத்துவதாக இல்லை.

இரு தெற்காசிய நாடுகளுக்கும் இடையிலான மோதலை நிறுத்தியதாக இதுவரையில் அமெரிக்க ஜனாதிபதி சுமார் 70 தடவைகள் கூறியிருப்பதாக சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன. அவர் இறுதியாக கடந்த புதன்கிழமை பென்சில்வேனியா மாநிலத்தின் நகரொன்றில் நிகழ்த்திய உரையில் அதை கூறியிருக்கிறார். இரண்டாவது தடவையாக பதவிக்கு வந்த பின்னரான 10 மாதங்களில் 8 போர்களை நிறுத்தியிருப்பதாக அவர் பெருமையுடன் உரிமை கோருகிறார்.

மத்திய கிழக்கில் காசா பள்ளத்தாக்கில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் இடையிலான இரு வருட காலப் போர், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போர், தென்கிழக்காசிய நாடுகளான தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான போர், ஆர்மேனியாவுக்கும் அசர்பைஜானுக்கும் இடையிலான போர், எகிப்துக்கும் எதியோப்பியாவுக்கும் இடையிலான போர், சேர்பியாவுக்கும் கொசோவோவுக்கும் இடையிலான போர் மற்றும் ஆபிரிக்க நாடுகளான ருவாண்டாவுக்கும் கொங்கோ ஜனநாயக குடியரசுக்கும் இடையிலான போர் ஆகியவையே ட்ரம்ப் நிறுத்தியதாகக் கூறும் போர்களாகும்.

இந்த போர்களை பெரும்பாலும் வர்த்தக வரிகளை விதிக்கப் போவதாக அல்லது அதிகரிக்கப்போவதாக அச்சுறுத்தியதன் மூலமே நிறுத்தியதாகவும் கூறிய அவர் இந்த சர்வதேச மோதல்களை நிறுத்தி உலகில் சமாதானத்துக்காக பாடுபடுவதற்காக தனக்கு 2025 நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டும் என்றும் தானாகவே கேட்டார். அவருக்கு அந்த சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று அதற்கு நியமனங்களை செய்வதற்கான காலஅவகாசம் கடந்த ஜனவரியில் முடிவடைந்த பிறகு சிபாரிசு செய்தவர்களில் போர்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு பிறகு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகுவும் ஒருவர்.

ஆனால், இறுதியில் ட்ரம்பினால் சர்வதேச உதைபந்தாட்ட சங்கங்களின் சம்மேளனத்தின் சமாதானப்பரிசை மாத்திரமே பெறக்கூடியதாக இருந்தது. அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் உலக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடர்பாக சில தினங்களுக்கு முன்னர் வாஷிங்டனில் நடைபெற்ற விமரிசையான நிகழ்வில் வைத்து வழங்கப்பட்ட அந்த பரிசும் கூட சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதிக்கு சமாதானப் பரிசை வழங்கியதன் மூலம் அரசியல் நடுநிலை தொடர்பிலான சம்மேளனத்தின் ஆட்சிக்குழுவின் விதிமுறைகளை மீறியதாக அதன் தலைவர் கியானி இன்பான்ரினோ மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. அவருக்கு எதிராக விசாரணை நடத்துமாறு சம்மேளனத்தின் ஒழுங்கு கட்டுப்பாட்டுக் குழுவிடம் கேட்கப்பட்டிருக்கிறது.


தன்னால் நிறுத்தப்பட்டதாக ட்ரம்ப் கூறிய எந்தவொரு போரிலும் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு இடையிலான பதற்றநிலை இன்னமும் தணிந்ததாக இல்லை.

காசாவிலும் சூடானிலும் இடம்பெற்றுவரும் இனப்படுகொலைகள், உக்ரெயின் மீது ரஷ்யா தொடர்ந்து மேற்கொண்டுவரும் தாக்குதல்கள், கொங்கோவின் கிழக்கு பிராந்தியத்தில் இடம்பெறும் சண்டைகள், லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள், மியன்மார் இராணுவத்தின் விமானக்குண்டு வீச்சுக்கள் மற்றும் அமெரிக்காவில் அதிகரித்துவரும் அரசியல் வன்முறைகளை அலட்சியம் செய்தால் மாத்திரமே ட்ரம்ப் உலகில் சமாதானத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்று எம்மால் கற்பனை செய்துபார்க்க முடியும்.

கடந்த ஜூலையில் இராணுவ மோதல்களை நிறுத்திய தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையில் கடந்த வாரம் மீண்டும் மோதல்கள் மூண்டிருந்தன. ட்ரம்பின் உதவியுடன் பிரகடனம் செய்யப்பட்ட போர் நிறுத்தம் எந்தளவுக்கு சஞ்சலமானதாக இருக்கிறது என்பதை இந்த புதிய மோதல்கள் வெளிக்காட்டுகின்றன. இரு தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இடையில் மீண்டும் சண்டை மூண்டிருப்பது குறித்து பென்சில்வேனியா உரையில் குறிப்பிட்ட ட்ரம்ப் மோதல்களை நிறுத்துவதற்கு அவற்றின் தலைவர்களுடன் தொலைபேசியில் பேசவிருப்பதாக அறிவித்தார். ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் போரை நிறுத்தப் போவதாக வேறு எவரினால் கூறமுடியும் என்றும் அவர் கேட்டார். தன்னைத் தவிர வேறு எவரினாலும் அவ்வாறு செய்ய முடியாது என்று அவர் மார்தட்டுகிறார்.

தனது முதலாவது பதவிக்காலத்தில் உலகின் எந்த பாகத்திலும் போருக்கு அமெரிக்கப்படைகளை அனுப்பவில்லை என்று பெருமையாகக் கூறிய ட்ரம்ப் தற்போது இரண்டாவது பதவிக்காலத்தில் தனது தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள் மூலமாக பல பிராந்தியங்களில் பதற்றநிலை அதிகரிப்பதற்கு காரணமாக இருக்கிறார்.

டென்மார்க் நாட்டுக்கு சொந்தமான கிறீன்லாந்து தீவைக் கைப்பற்றுவதற்கும் பனாமா கால்வாயை அமெரிக்காவுக்கு சொந்தமாக்குவதற்கும் படைகளை அனுப்புவதற்கான சாத்தியத்தை நிராகரிப்பதற்கில்லை என்று முன்னர் கூறிய அவர் தற்போது எண்ணெய் வளமிக்க தென்னமெரிக்க நாடான வெனிசூலாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள் என்ற போர்வையில் இராணுவத் தாக்குதலுக்கு தயாராகிறார். போதைப் பொருளுக்கு எதிரான போரில் மெக்சிக்கோவிற்குள் தாக்குதல் நடத்துவது குறித்தும் அவர் ஏற்கெனவே எச்சரிக்கை செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிரானவை என்று கூறிக்கொண்டு கரிபியன் மற்றும் பசுபிக் கடற்பிராந்தியங்களில் கடந்த சில வாரங்களாக தாக்குதல்களை நடத்துவதன் மூலமாக வெனிசூலா ஜனாதிபதி நிக்கலஸ் மடுரோ மீது அமெரிக்கா நெருக்குதலை தீவிரப்படுத்தியிருக்கிறது. 1989 ஆம் ஆண்டில் பனாமா ஆக்கிரமிப்பிற்கு பிறகு கரிபியன் கடற்பரப்பில் பெருமளவில் அமெரிக்கப் படைக்குவிப்பு தற்போதுதான் இடம்பெற்றிருக்கிறது.

வெனிசூலாவின் வான்பரப்பு முற்றாக மூடப்பட்டுவிட்டதாக கருதப்பட வேண்டும் என்று இரு வாரங்களுக்கு முன்னர் ட்ரம்ப் கூறினார். கரிபியன் கடற்பரப்பில் வெனிசூலா மீது தாக்குதல் நடத்தக்கூடிய தூரத்திற்குள் அமெரிக்கப் போர்க்கப்பல்கள் தரித்துநிற்கின்றன. போதைப்பொருளை கடத்திச்செல்வதாக கூறப்படும் படகுகள் மீது அமெரிக்கப்படைகள் நடத்திய தாக்குதல்களில் அண்மைய வாரங்களில் பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பு என்று வாஷிங்டனால் தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல் குழுமம் ஒன்றின் தலைவராக ஜனாதிபதி மடுரோ செயற்படுகிறார் என்று குற்றஞ்சாட்டும் அமெரிக்க அரசாங்கம் அதற்கு திட்டவட்டமான சான்று எதையும் இதுவரை முன்வைக்கவில்லை.

வெனிசூலாவுக்கு எதிரான தடைகளை ட்ரம்ப் விரிவுபடுத்தியிருப்பதுடன் ஏற்றுமதிக்கு தடைசெய்யப்பட்ட எண்ணெயை ஏற்றிச் சென்றதாக குற்றஞ்சாட்டி வெனிசூலா கரையோரமாக கப்பல் ஒன்றை அமெரிக்கா டிசம்பர் 10 ஆம் திகதி கைப்பற்றியது. கரிபியனில் ‘கடற்கொள்ளை யுகம்’ ஒன்றை அமெரிக்க ஜனாதிபதி தோற்றுவிக்கிறார் என்று மடுரோ குற்றஞ்சாட்டியிருக்கிறார். அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளை நோபல் சமாதானப் பரிசைப் பெற்ற வெனிசூலாவின் வலதுசாரி எதிர்க்கட்சி தலைவியான மரியா கொரினா மச்சாடோ முழுமையாக ஆதரிக்கிறார்.

ஹியூகோ ஷாவேஸின் மறைவைத் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டில் இருந்து வெனிசூலாவின் ஜனாதிபதியாக பதவியில் இருந்துவரும் (சோசலிசவாதி என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ) மடுரோ 2024 ஜனாதிபதி தேர்தலில் மோசடிகளைச் செய்து வெற்றிபெற்றதாகக் குற்றச்சாட்டப்படுகிறது.

அவரது ஆட்சியில் பொருளாதாரம் படுமோசமான பின்னடைவைக் கண்டதையடுத்து இலட்சக்கணக்கில் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறினார்கள். வெனிசூலாவின் இன்றைய நிலைமைக்கு மடுரோ பொறுப்பு என்ற போதிலும், வாஷிங்டன் விதித்திருக்கும் தடைகளும் அந்த நிலைமைக்கு பெருமளவில் பங்களிப்பைச் செய்திருக்கின்றன.

மடுரோவின் அரசாங்கத்தை மலினப்படுத்தும் ஒரு முயற்சியாக அமெரிக்காவும் பல ஐரோப்பிய நாடுகளும் அவரை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சி முக்கியஸ்தரான ஜூவான் குவாய்டோவையே ஜனாதிபதியாக அங்கீகரித்திருந்தன.

மடுரோ ஜனநாயக விரோதமாக எதேச்சாதிகார ஆட்சி நடத்துகிறார் என்று குற்றஞ்சாட்டி அவருக்கு எதிரான போராட்டத்தை அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் துணிச்சலாக முன்னெடுக்கிறார் என்பதற்காகவே எதிர்க்கட்சி தலைவி மச்சாடோவுக்கு நோபல் சமாதானப்பரிசு வழங்கப்பட்டது. கடந்த அக்டோபரில் சமாதானப்பரிசு அறிவிக்கப்பட்ட உடனடியாகவே அதை அமெரிக்க ஜனாதிபதிக்கு சமர்ப்பணம் செய்வதாக மச்சாடோ அறிவித்தார். மடுரோ ஆட்சிக்கு எதிரான ஜனநாயகப் போராட்ட இயக்கத்துக்கு ட்ரம்ப் தீர்க்கமான ஆதரவை வழங்கிவருவதற்காக அவருக்கு மச்சாடோ நன்றி தெரிவித்தார்.

கடந்த வருட தேர்தலுக்கு பிறகு மச்சாடோ தலைமறைவாக இருந்து வருகிறார். தனது மறைவிடத்தில் இருந்து இரகசியமாக கடல் மார்க்கமாக வெளியேறி நோர்வேக்குச் சென்று நோபல் சமாதானப் பரிசை தானே நேரடியாக சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10 ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெற்ற வைபவத்தில் பெறுவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சி பலிக்கவில்லை.

உரிய நேரத்துக்கு மச்சாடோவினால் ஒஸ்லோவைச் சென்றடைய முடியவில்லை. அதனால் அவரின் மகளே பரிசைப் பெற்றுக்கொண்டார். ஆனால் காலந்தாழ்த்தியேனும் ஒஸ்லோ சென்ற மச்சாடோவுக்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. தனது நாட்டில் இருந்து வெளியேறி ஐரோப்பாவுக்கு வருவதற்கு அமெரிக்கா செய்த உதவிக்காக அவர் நன்றிகூறினார்.

வெனிசூலாவுக்குள் அமெரிக்க இராணுவத்தை அனுப்பி மடுரோவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ட்ரம்பின் திட்டத்துக்கு அமெரிக்க காங்கிரஸூக்குள் எதிர்ப்பு இருக்கிறது. கடந்த வாரம் எண்ணெய்க்கப்பல் கைப்பற்றப்பட்ட சம்பவத்துக்கு பிறகு கருத்து தெரிவித்த ஜனநாயக கட்சி காங்கிரஸ் உறுப்பினர்கள் ட்ரம்ப் ‘நித்திரையில் போருக்குள் நடந்துசெல்கிறார்” என்று வர்ணித்திருந்தார்கள்.

கரிபியன் கடற்பரப்பில் அமெரிக்கப்படைகள் நடத்திவரும் தாக்குதல்களில் குடிமக்கள் பலர் கொல்லப்படுவது அப்பட்டமான சர்வதேச சட்டமீறலாகும். மடுரோவின் ஆட்சியில் தன்மை எத்தகையதாக இருந்தாலும், அவருக்கு எதிரான ட்ரம்ப் நிருவாகத்தின் அச்சுறுத்தல்கள் வெனிசூலாவின் சுயாதிபத்தியத்தின் மீதான தாக்குதல்களேயாகும்.

கடந்த காலத் தவறுகளில் இருந்து அமெரிக்கா படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதே இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும்.

வியட்நாம் போர்க்காலத்தில் ஒரு கட்டத்தில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த றொபேர்ட் மக்னமாரா (பிறகு அவர் உலகவங்கியின் தலைவராகவும் பதவி வகித்தார்) ஜேர்மன் தத்துவஞானி ஹெகலின் கூற்று ஒன்றை நினைவு கூர்ந்தார். “ வரலாற்றில் இருந்து எவரும் படிப்பினைகளைப் பெறுவதில்லை என்பதே வரலாற்றில் இருந்து பெறக்கூடியதாக இருக்கும் படிப்பினையாகும்.”

9- 11 தாக்குதல்களுக்கு பிறகு 2001 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானுக்குள் படையெடுத்த அமெரிக்கா இருபது வருடக்களுக்கு பிறகு தலிபான்களுடன் இணக்கப்பாடொன்றுக்கு வந்து வெளியேறுவதை தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை. சதாம் ஹூசெய்ன் பேரழிவுதரும் ஆயுதங்களை குவித்து வைத்திருப்பதாகக் கூறிக்கொண்டு 2003 ஆம் ஆண்டில் ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்த பிறகு இடம்பெற்றவை உலகில் இடம்பெற்றிருக்கக்கூடியபடுமோசமான மனிதப் பேரவலங்களில் ஒன்றாக அமைந்தது.

தற்போது பல போர்களை முடிவுக்கு கொண்டுவந்ததாக கூறி நோபல் சமாதானப் பரிசுக்கு ஆசைப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் வெனிசூலாவில் அதே தவறைச் செய்வதற்கு தயாராகும் அபத்தத்தைக் காண்கிறோம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகள் பின்பற்றுவதற்கு உதாரணத்தை வகுக்கும் மக்கள்!



கலாநிதி ஜெகான் பெரேரா

டித்வா சூறாவளியின் விளைவான அனர்த்தங்களை தங்களுக்கு அரசியல் அனுகூலமாக மாற்றுவதற்கு எதிரணியின் சில அரசியல் கட்சிகள் கடுமையாக முயற் சிக்கின்றன. எதிர்பார்த்திராத பரிமாணங்களிலான அத்த கைய பேரிடர், அதன் விளைவான அனர்த்தங்களை கையா ளுவதற்கு சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணையக்கூடிய சூழ்நிலையையே தோற்றுவித்திருக்க வேண்டும். அவ்வாறான சூழ்நிலை தோன்றத் தவறியமை அரசியல் மற்றும் தார்மீக வங்குரோத்தையே வெளிக்காட்டுகிறது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் எச்சரிக்கைகள் தொடர்பில் முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தவறியதையே பிரதான பிரச்சினையாக எதிர்க்கட்சிகள் வலிந்து முன்னிலைப்படுத்துகின்றன. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் வேறு மூத்த அரசியல்வாதிகளுடனும் எதிர்க்கட்சிகள் தனியாக கூட்டம் ஒன்றையும் நடத்தினர். அவர்கள் கடந்த காலத்தில் இயற்கை அனர்த்தங்களையும் மனிதர்களினால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்களையும் கையாண்ட தங்களது அனுபவங்களை பகிர்ந்துகொண்டதுடன் அதற்கு இணையாக தற்போதைய அரசாங்கம் செயற்படத் தவறியதையும் சுட்டிக்காட்டினர்.

சூறாவளி ஏற்படுத்திய பேரழிவை முன்கூட்டியே எதிர்பார்ப்பதில் இருக்கும் பிரச்சினையை அனர்த்த முகாமைத்துவ முறைமை மீதான கவனக்குறைவு மேலும் சிக்கலாக்கியது. இதில் முன்னைய அரசாங்கங்களும் அடங்கும். ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை வெளிப்படையாகவும் ஊழலற்ற முறையிலும் பயன்படுத்த அரசாங்கங்கள் தவறியிருக்கின்றன. “ஆபத்தான வலயங்கள்” என்று அரசாங்கத்தின் ஒரு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமான தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் அடையாளப்படுத்தப்பட்ட நிலங்களில் மக்கள் கட்டிடங்களை நிர்மாணித்தார்கள். அதை அரசாங்கங்களும் சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களும் அலட்சியம் செய்துவிட்டன.

தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு 1984 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. மண்சரிவு ஆபத்தைக் கொண்ட வலயங்களை அடையாளம் கண்டு அவற்றின் வரைபடங்களை வரையும் திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்கான தீர்மானம் 1986 ஆண்டில் எடுக்கப்பட்டதை தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் பதிவுகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது. மண்சரிவு ஏற்படக்கூடிய சரிவுகளை அடையாளங்காணுதல், வலயங்களை வகைப்படுத்துதல் மற்றும் வரைபடங்களை வரையும் நிறுவன ரீதியான செயன்முறை சுமார் 30 - 40 வருடக்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையை டித்வா சூறாவளி தாக்கிய அதே நேரத்தில் இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளையும் சூறாவளிகள் தாக்கின. அந்த நாடுகளும் முன்னெச்சரிக்கைகளை எடுப்பதற்கான தயார்நிலையில் இருக்கவில்லை என்பதால் பெரும் அழிவைச் சந்தித்தன. பரந்தளவில் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் சூறாவளிகள் ஏற்படுத்திய அழிவுகள் பூமியின் காலநிலை மாற்றத்தின் விளைவானவை.

டித்வா சூறாவளியின்போது மத்திய மலைநாட்டின் சில பாகங்களில் மழைவீழ்ச்சி 500 மில்லி மீட்டருக்கும் அதிகமானதாக இருந்தது. பிராந்தியத்துக்கு பிராந்தியம் பரந்தளவில் மழை வீழ்சியின் அளவு வேறுபடுகின்ற போதிலும், இலங்கையின் வருடாந்த சரிசரி மழைவீழ்ச்சி சுமார் 1850 மில்லி மீட்டர் என்பதை உத்தியோகபூர்வ காலநிலைத் தரவுகள் கூறுகின்றன. இந்த வருடாந்த சராசரி உலர்வலயங்களில் 900 மில்லி மீட்டராகவும் ஈரவலயங்களில் சுமார் 5000 இருந்துவந்தது. டித்வா சூறாவளியின் விளைவான அடைமழை சில சமூகங்களைப் பொறுத்தவரை அவை வழமையாக பெறுகின்ற வருடாந்த மழை வீழ்ச்சியை விடவும் பாரியளவில் அதிகமானதாக இருந்தது.

தனியொரு அரசியல் கட்சியினால் அல்லது அரசாங்கத்தினால் தீர்வுகாண இயலாத இலங்கையின் சவால்களின் வரிசையில் காலநிலை மாற்றமும் சேர்ந்துகொள்கிறது. அனைத்து தரப்புக்களையும் அரவணைக்கும் அணுகுமுறை அவசியப்படுகின்ற பொருளாதார வங்குரோத்து, இனநெருக்கடி மற்றும் ஆட்சிமுறையில் ஊழல் போன்றதே காலநிலை மாற்றத்தின் விளைவாக நெருக்கடியும். அந்த அணுகுமுறையைப் பொறுத்தவரை, அரசாங்கத்தை வெறுமனே விமர்சிப்பதை விடுத்து எதிர்க்கட்சிகளும் சிவில் சமூகமும் வர்த்தக சமூகமும் ஒன்றிணைய வேண்டியது அவசியமானதாகும்.

அரசாங்கத்தினால் நிரப்பமுடியாத இடைவெளிகளை நிரப்பக்கூடிய ஆற்றல்களைக் கொண்டதாக பெருமளவுக்கு சக்தியும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் பரிச்சயமும் கொண்ட இளைய தலைமுறை ஒன்று இன்று இருக்கிறது. ஒரு வகையில் சொல்லப்போனால் எதிர்க்கட்சிகளையும் பாரம்பரியமான சிவில் சமூகத்தையும் இந்த தலைமுறை பயனற்றதாக்குகிறது எனலாம்.

வெள்ளப்பெருக்கும் மண்சரிவுகளும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு பேரிடரை ஏற்படுத்தியிருக்கிறது என்ற செய்தி வந்த சில மணி நேரத்திற்குள் மக்கள் இயக்கம் ஒன்று நிவாரண நடவடிக்கைகளை உடனடியாகவே முன்னெடுத்தது. அந்த இயக்கத்துக்கு அமைப்பாளரோ அல்லது தலைவரோ இருக்கவில்லை. வளங்களைச் சேகரிக்கவும் சமூகச் சமையல் நிலையங்களை அமைத்து உணவைச் சமைக்கவும் தொண்டர்களை அணிதிரட்டுவதற்கு நூற்றுக்கணக்கானவர்கள் இருந்தார்கள்.



சூறாவளி அனர்த்தம் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய ஐக்கியம் உடனடி நிவாரணங்களை வழங்கும் கட்டத்தை தாண்டி நீண்டகால நோக்கில் அரசியல் நல்லிணக்கத்துடன் கூடிய தேசிய புனர்நிர்மாணப் பணிகளுக்கும் நீடிப்பதை உறுதிசெய்வது அரசாங்கத்துக்கு பெரிய சவாலாக இருக்கும்.

இந்த சமூகச் சமையில் நிலையங்கள் பாடசாலைகளில், கோவில்களில், பள்ளிவாசல்களில், வாகனங்களை திருத்தும் நிலையங்களில், ஏன் வீதியோரங்களில் கூட தோன்றின. விநியோகங்களை திரட்டவும் வாகனங்களில் அவற்றைக் கொண்டுசென்று விநியோகிக்கவும் தொண்டர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்தினார்கள். மரங்கள் வீழ்ந்ததனாலும் மண்சரிவுகளின் காரணமாகவும் பயணம் செய்ய முடியாதவையாக இருந்த மார்க்கங்களில் தடைகளை அகற்றுவதில் அவர்கள் ஒருங்கிணைந்து செயற்பட்டார்கள். முறைசார் நிறுவனங்களினால் சாதிக்கமுடியாத அரிதான அர்ப்பணிப்பு உணர்வையும் ஒருங்கிணைப்பையும் அந்த மக்கள் இயக்கத்திடம் காணக்கூடியதாக இருந்தது.

தன்னியல்பாக குவிந்த ஆதரவு இளைஞர்கள் மத்தியில் மாத்திரம் காணப்பட்ட ஒரு தோற்றப்பாடு அல்ல. பொதுவில் மக்களும் நிவாரண முயற்சிகளுக்கு பங்களிப்பைத் தாராளமாகச் செய்தார்கள். மக்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் மூலமாக கொள்வனவு செய்யப்பட்ட 23 தொன் அரிசியை சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு காலி மாவட்டச் செயலகம் அனுப்பியது. படுமோச மாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தொண்டர் குழுக்களை அனுப்புவதற்காக ஏற்பாடுகளை மாத்தறை மாவட்டச் செயலகம் செய்திருந்தது.

2022 அறகலய இயக்கத்தைப் போன்றே இந்த நிவாரண முயற்சிகளில் சகல இன, மத சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்துகொண்டனர். சமூக வேறுபாடுகளைப் பாராமல், தேவைப்பட்ட சகலருக்கும் அவர்கள் உதவிகளை வழங்கினர். நெருக்கடியான வேளைகளில் இலங்கையர்கள் ஒருவரை மற்றவர் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்று பாராமல் பாகுபாடு எதுவுமின்றி மனிதப் பிறவிகளாகவே நடத்துகிறார்கள் என்பதை இது காட்டியது.

சூறாவளி அனர்த்தம் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய ஐக்கியம் உடனடி நிவாரணப்பணிக் கட்டத்தையும் கடந்து நீண்டகால அடிப்படையிலான தேசிய புனர்நிர்மாண பணிக்கும் தொடருவதை உறுதி செய்வது அரசாங்கத்துக்கு பெரிய சவாலாக இருக்கப் போகிறது. மனித பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பொருளாதார அபிவிருத்தியின் போக்கை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தவேண்டிய அவசியம் இருக்கிறது.

ஐயாயிரம் அடிக்கு மேல் உள்ள இடங்களில் வசிக்கின்ற மக்களை வேறு இடங்களில் மீளக்குடியமர்த்திவிட்டு அந்த இடங்களில் மீண்டும் காடு வளர்ப்பை முன்னெடுக்க வேண்டிய தேவை பற்றி ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க பேசினார். மீள்குடியமர்வுக்கு வேறு பகுதிகளில் நிலங்களை கண்டுபிடிக்க வேண்டும். மலைநாட்டில் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளின்போது மலையகத் தமிழர்களின் காணியுரிமை பற்றிய பிரச்சினைக்கும் அரசாங்கம் தீர்வைக்காண வேண்டிய தேவை இருக்கிறது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து மலையக தமிழர்களுக்கு நிலத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் உரிமை மறுக்கப்பட்டுவருகிறது. முதலில் அதற்கு குடியுரிமைப் பிரிச்சினையும் தற்போது வறுமையும் இந்த பிரச்சினைகளை தொழிலாளர்களுக்கு பயன்தரத்தக்க வகையில் நீதியாகவும் மனிதாபிமான முறையிலும் கையாளுவதற்கு பெருந்தோட்ட முகாமைத்துவங்களுக்கு விருப்பமின்மையும் காரணங்களாக இருந்து வருகின்றன. மலையகத் தமிழர்களின் மீள்குடியேற்றம் சிக்கலான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கேள்விகளைக் கிளப்புகிறது.

இடம்பெயர்ந்த சமூகங்கள் நீர்வசதி, உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரங்கள் இல்லாத பகுதிகளுக்கு இடமாற்றப்பட்ட கடந்தகாலத் தவறுகள் மீண்டும் இடம் பெறாதவாறு மிகவும் கவனமாக திட்டமிடுவது அவசியமாகிறது.

நிலம் என்பது அடையாளம், இனத்துவம் மற்றும் வரலாற்று ரீதியான மனக்குறைகளுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டதாக இலங்கையில் மிகவும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளில் ஒன்றாக இருப்தால் இந்த விடயத்தில் அரசியல் கருத்தொருமிப்பும் அவசியமாகிறது. நிலைபேறான எந்தவொரு தீர்வும் தற்காலிக இடமாற்றுதலுக்கு அப்பால் செல்ல வேண்டும் என்பதுடன் மலையக தமிழ்ச் சமூகம் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப் பட்டு ஒதுக்கிவைக்கப்பட்ட வரலாற்று தவறுக்கு முகங்கொடுத்து அதை திருத்தியமைப்பதாகவும் அமையவேண்டும். அந்த சமூகத்தின் உழைப்பே பெருந்தோட்டப் பொருளாதாரத்தை தாங்கிப்பிடிக்கின்றது என்றபோதிலும், அவர்களே இலங்கையில் மிகவும் வறிய பிரிவினராக இருந்து வருகிறார்கள்.

டித்வா சூறாவளி ஒரு திருப்புமுனையாக மாறியிருக்கிறது. ஆட்சிமுறையையும் அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான முன்கூட்டிய தயார்நிலையையும் பலப்படுத்த வேண்டிய அவசியத்தை அது பிரகாசமாக வெளிக்காட்டியிருக்கிறது. அதேவேளை, இலங்கைக்கான வேறுபட்ட சாத்தியங்களையும் அது புலப்படுத்தியிருக்கிறது. மனிதாபிமானத்துடனும் சகலரினதும் நல்வாழ்வில் அக்கறையுடனும் வாழ்வதற்கான - அரசியல் தலைமைத்துவம் பின்பற்றக்கூடிய ஒரு உதாரணத்தை பொதுமக்கள் வகுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஐக்கியமும் பரிவிரக்கமும் உறுதிவாய்ந்தவையாக இருக்கின்றன என்பதை டித்வா சூறாவளியின் விளைவான பேரிடர்களுக்கு கூட்டாக முகங்கொடுத்ததன் மூலமாக மக்கள் காண்பித்திருக்கிறார்கள். மானசீகமான அக்கறை, தார்மீக உணர்வு மற்றும் கடுமையான உழைப்புடன் செயற்படுவதில் நாட்டம் கொண்ட அரசாங்கம் ஒன்று மக்கள் காட்டிய அந்த உதாரணத்தை பின்றபற்ற வேண்டும். சூறாவளி அனர்த்தம் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய ஐக்கியம் உடனடி நிவாரணங்களை வழங்கும் கட்டத்தை தாண்டி நீண்டகால நோக்கில் அரசியல் நல்லிணக்கத்துடன் கூடிய தேசிய புனர்நிர்மாணப் பணிகளுக்கும் நீடிப்பதை உறுதிசெய்வது அரசாங்கத்துக்கு பெரிய சவாலாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் அநுர அரசுக்கு வழங்கிய நற்சான்று ஆட்சியின் நீட்சிக்கான வழிகாட்டி!

பனங்காட்டான்

மழை விட்டும் தூவானம் போகவில்லையென்பது ஒரு வாழ்மொழி. மழை நிலத்தை நனைக்கும் வெறும் தண்ணீர் அல்ல. மனிதனின் அன்றாட வாழ்வுக்கு அத்தியாவசியமானது.

ஆனால், மழை காற்றுடன் இணையும் பொழுது அதன் வீச்சு வேறாகிறது. மழை தூறுகிறது, மழை பெய்கிறது, மழை பொழிகிறது என்ற சொல்லாடல்கள் ஊடாக தென்றலுக்கும் புயலுக்கும், சூறாவளிக்குமிடையிலான அர்த்தத்தை புரிந்து கொள்ளலாம். சூறாவழியால் ஏற்பட்ட அனர்த்தத்தை இலங்கை இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறது. சர்வதேசமும் இதனை உணர்ந்து உதவிக் கரங்களை நீளமாக நீட்டுகின்றன.

தேசிய மக்கள் சக்தி அரசு அநுர குமர தலைமையில் கண்களை மூடிக்கொண்டு நிவாரணப் பணிகளை மேற்கொள்கிறது. இதற்கு ஏதுவாக உலகம் தாராளமாக உதவுகிறது. அனர்த்தத்தால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்க்கும்போது நாடு வழமைக்குத் திரும்ப பல மாதங்கள் அல்லது வருடங்கள்கூட ஆகலாம்.

இலங்கை எல்லோருக்கும் பொதுவானது என்பதை எடுத்துக்காட்ட (இதுவும் ஒருவகை அரசியல்தான்) கடந்த 12ம் 13ம் திகதிகளில் இடம்பெறவிருந்த இலங்கையர் தினம் என்னும் தேசிய நிகழ்வு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஜனாதிபதி நேரடியாகச் சென்று பார்வையிடுகிறார். சிறுவர் முதல் முதியோர் வரையானவர்களை அணைத்து ஆறுதல் கூறுகிறார். குடும்ப உறவுகளை இறந்தவர்களுக்கு தேறுதல் கூறி உடனடி நிவாரணத்துக்கு உத்தரவாதம் வழங்குகிறார்.

மத்திய மாகாணத்தின் பெரும்பகுதிகளே பெரும் அழிவைச் சந்தித்துள்ளன. மண் சரிவுகளில் அகப்பட்டு காணாமல் போயுள்ள சுமார் 200க்கும் அதிகமானவர்களுக்கு இறப்புப் பதிவு சான்றிதழ் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது பெறுபவர்களுக்கு தாமதமின்றி அதற்கான நிவாரணம் கிடைக்குமாம். வீடுகளை சுத்தப்படுத்த 25,000 ரூபா, மேலதிக செலவுகளுக்கு 50,000 ரூபா, உயிரிழப்புகளுக்கும், வீடழிப்புகளுக்கும் நிறைவான நிவாரணம். ஜனாதிபதி உத்தரவில் அரச இயந்திரம் வேகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் எங்கிருந்து நிதி கிடைக்கும் என்ற ஆராய்ச்சியில் எதிர்க்கட்சிகள் தங்கள் சக்தியை செலவழிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ள பலர் இன்னமும் தங்கள் தொகுதிகள் பக்கமே போகவில்லை. தங்கள் வாக்குகளால் எம்.பியானவர்களைத் தேடி தொகுதி மக்கள் நெடுமூச்சு விடுகின்றனர். எந்தவொரு நாடாளுமன்ற எம்.பியாவது தங்களின் ஒரு மாதச் சம்பளத்தைக்கூட நிவாரண நிதிக்கு வழங்கியதாக இதுவரை தெரியவில்லை. அர்ச்சுனா இராமநாதன் தமது பங்காக நான்கு இலட்சம் ரூபாவுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கியதாக அறிவித்துள்ளார். எதிர்க்கட்சிகளின் பிரமுகர்கள் அவ்வப்போது எங்காவது சென்றுவிட்டு ஊடகங்களில் செய்தி போடுகின்றனர்.

ஒரு நாள் மழைக்கு ஒரு நாள் சம்பளத்தை வழங்கிய எம்.பிக்களின் காலம் முன்னர் இருந்தது. 1978ம் ஆண்டு சூறாவளியின்போது எம்.பிக்களின் தாராள நிதி உதவியை நேரில் தரிசித்த சாட்சி இந்தப் பத்தி எழுத்தாளர். ஆனால், இன்று நிலைமை அப்படிக் காணப்படவில்லை.

உலக நாடுகள் முன்னர் வழங்கிய உதவி போதாது என்று மேலும் மேலும் வழங்கி வருகின்றன. சில நாடுகள் இரண்டாம் முறையாகவும் வழங்குகின்றன. மேலும் உதவிக்கு உத்தரவாதம் கொடுக்கின்றன. இலங்கையின் மீட்பு முயற்சிக்கு இலங்கைப் பணத்தில் ஆயிரம் கோடி ரூபாவை திரட்ட ஐக்கிய நாடுகள் சபை இணங்கியுள்ளதாக அதன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரே பிரான்சே கூறியுள்ளார். அதேசமயம் இனி வரக்கூடிய காலநிலை மாற்ற பேரிடர்களை எதிர்கொள்ள முதலீடுகள் தேவையென்று அநுர அரசுக்கு ஆலோசனையும் வழங்கியுள்ளார்.

பேரிடரிலிருந்து இலங்கை மீள்வதற்கு அரசு கேட்ட 200 மில்லியன் டாலர்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் முடிவெடுத்துள்ளது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு 200 மில்லியன் டாலரை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்கள் இடம்பெறாது பார்த்துக் கொள்ள வேண்டியது தமிழ் அரசியல் கட்சிகளின் பாரிய கடமை. தொல்பொருள், வனபரிபாலன திணைக்களங்கள் இவ்வாறான நிதிகளில் தங்கள் கைங்கரியங்களை நிறைவேற்றக்கூடிய அபாயம் உண்டு. இதற்கு கடந்த கால, நிகழ்கால அனுபவங்கள் பல உள்ளன.



வெளிநாட்டு தூதுவர்களை சந்திப்பதில் அரசியல் ஆதாயம் தேடுகிறார் சஜித். மாகாணசபை தேர்தல் மூலம் நிவாரணம் பெற தமிழரசுக் கட்சி முயற்சி. பேபி நாமல் அரசியலில் இன்னமும் புட்டிப்பால் குடிக்கிறார்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் சிலர் ஒன்றிணைந்து தங்கள் சொந்தப் பணத்தில் 3.6 மில்லியன் ரூபாவை நிவாரணத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். இது முற்றிலும் முன்மாதிரியான ஒரு செயற்பாடு. அமெரிக்காவின் இராஜாங்க உதவிச் செயலாளர் அலிசன் கூக்கர் இப்போது இலங்கையில் நிற்கிறார். அமெரிக்காவின் சி-130 உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வேளையில் இவரது வருகை அதனுடன் சேர்ந்துள்ளது.

ஜனாதிபதி அநுர குமரவை நேரில் சந்தித்து உரையாடிய இவர், இலங்கையின் மீள் எழுச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க அமெரிக்க தயார் என்று உறுதியளித்துள்ளார். ஆங்கிலத்தில் பிளாங் செக் என ஒன்றுண்டு. ஒரு தொகையுமே குறிப்பிடாது வழங்கப்படும் காசோலை என்பது இதன் அர்த்தம். அதாவது, காசோலையின் பெறுனர் தமக்குத் தேவையான தொகையை இதில் எழுதலாம். அவ்வாறான உத்தரவாதம் அலிசன் உடையது. இது தவிர, இலங்கை மீது அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்திருக்கும் தீர்வை வரியை ரத்தாக்குவது அல்லது குறைப்பது பற்றியும் அமெரிக்கா ஆலோசிப்பதாக கூறியுள்ளார்.

இந்தியா, சீனா போன்ற நாடுகள் வழங்கும் உதவிகளுக்கு நிகராக அல்லது அதனிலும் மேலாக அமெரிக்க உதவி கிடைக்கலாம்போலத் தெரிகிறது. ஏற்கனவே சி-130 நடவடிக்கைகள் மீது பலரும் ஐயம் வெளியிட்டு வரும் வேளையில் அமெரிக்காவின் அளவு கடந்த உதவிகள் மேலும் அச்சமூட்டுவதாக அமையலாம். முதலாளித்துவ மேலாண்மை கொள்கைகளைக் கொண்ட நாடுகளை எதிர்த்து வந்த ஜே.வி.பி.யின் பினாமி ஆட்சிக்கு அமெரிக்கா உதவுவது என்பது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது. உதவி எங்கிருந்து வந்தாலும் அதை தட்டிக்கழிக்க முடியாத நிலை இலங்கையினுடையது. இதனால் அரசியல் சித்தாந்தங்களை வெளிப்படுத்தி கிடைக்கும் உதவிகளை வெட்டுவதற்கு சிலர் முயற்சிப்பது கண்கூடு.



கடந்த ஆட்சிக் காலங்களில் ஊழல் புரிந்து, கொள்ளையடித்து பொத்தி வைத்திருக்கும் பணத்தில் ஒரு பகுதியைக்கூட நிவாரணத்துக்கு வழங்க உள்நாட்டு அரசியல்வாதிகள் முன்வரவில்லை. ஆனால், இவர்கள் வெளியிட்டுவரும் கருத்துகளும் அபிப்பிராயங்களும் அரசாங்கத்தைச் சாடுவதாகமும் மக்கள் மத்தியில் ஐயத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க நினைவு நிதியத்திலிருந்து 250 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதுடன் அவசியமற்ற தப்பபிப்பிராயங்களை பரப்ப வேண்டாமெனவும் வேண்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்ச திடீர் நோய்வாய்ப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உள்ளாகியுள்ளார். இவரது பொதுஜன பெரமுன விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் பேரிடர் உயிர்ச் சேதங்களுக்கு ஆளும் தரப்பே முழுப்பொறுப்பு என்று குற்றஞ்சாட்டியுள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடு பேரிடர் விடயத்தில் தாமதமானது என்பது உண்மை. அதனை ஆட்சித்தரப்பே ஒரு வகையில் ஒப்புக்கொண்டுள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்னரே பேரிடர் எச்சரிக்கை வழங்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்பது சகல எதிர்க்கட்சியினரதும் குற்றச்சாட்டு. எச்சரிக்கை ஏற்கனவே வழங்கப்பட்டதென்றால் இது விடயத்தில் அரசாங்கத்தைச் சுட்டி நடவடிக்கை எடுக்கத் தவறிய குற்றம் எதிர்க்கட்சிகள் மீதும் விழுகிறது என்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

முள்ளிவாய்க்கால் அழிவின் பின் பாதிக்கப்பட்டவர்களை ராஜபக்ச அரசு மீளக்குடியேற்றியது என்று சுட்டிக்காட்டியுள்ள நாமல் ராஜபக்ச, அநுர அரசு இப்போது ஏன் அவ்வாறு செயற்படவில்லை என்று கேட்டிருக்கிறார். முள்ளிவாய்க்கால் போரில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுககள் இத்தனை ஆண்டுகளாக வீதிகளில் நிற்பதை இவர் அறியவில்லைப் போலும். பேபி நாமல் பாவம்! இன்னமும் அரசியலில் புட்டிப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்.


எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கொழும்பிலுள்ள தூதுவர்களைச் சந்திப்பதில் மினக்கெடுகிறார். இவர்களை சந்திப்பதை ஊடகங்கள் ஊடாக படம் காட்டுகிறார். எல்லாவற்றிலுமே குறை காண்பவராக மல்லுக்கட்டுகிறார். இவரது கட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதாக எங்கும் காணப்படவில்லை.


எல்லாவற்றிலும் மேலானது தமிழர் தரப்பில் இடம்பெறும் அதிரடிகள். நிவாரணப் பணிகளைவிட இவர்களின் அறிவார்ந்த நிலைப்பாடு நிச்சயம் சொல்ல முடியாத மாகாணசபை தேர்தல். முன்னைய உள்ளாட்சித் தேர்தலின்போது வெளியேறியவர்களை (வெளியேற்றப்பட்டவர்கள்) மீண்டும் தமிழரசுடன் இணைப்பதற்கான முதற் கூட்டம் முடிவடைந்துள்ளது. இது ஒரு தொடர்கதையாகுமாம். இச்சந்திப்பின் பிறையோரிட்டி தமிழரசின் சுமந்திரனை மாகாணசபை தலைவராக்குவது. இதற்காக எந்த விட்டுக்கொடுப்புக்கும் தமிழரசு இறங்கியுள்ளது.

பேரழிவின் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் அநுர அரசின் நிகழ்ச்சிப் பட்டியலில் இப்போதைக்கு மாகாண சபை தேர்தல் இல்லையென்று பெலவத்தை வட்டாரங்கள் சொல்லுகின்றன. இவ்வேளையில் மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் அநுர அரசின் துரித நிவாரணப் பணிகளுக்கு வழங்கியுள்ள நற்சான்றிதழ் இந்த ஆட்சியின் நீட்சிக்கான வழிகாட்டியாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களும் அவற்றின் எதிர்காலமும்!





கந்தையா அருந்தவபாலன்

இலங்கையில் ஜனநாயக வழியில் அமைக்கப்படும் கீழ்மட்ட விருத்தி நிர்வாகக் கட்டமைப்பாக உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. மக்களால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றம், மாகாணசபைகள் ஆகியவற்றுக்கு அடுத்த படிநிலையில் உள்ளூராட்சி மன்றங்கள் இருந்தாலும், மாகாணசபைகளுக்கில்லாத சிலவகையான அதிகாரங்களை இச்சபைகள் கொண்டுள்ளன. பல்வேறு காரணங்களினால் ஏழு ஆண்டுகள் நடைபெறாதிருந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் தற்போதைய அரசாங்கம் பதவியேற்றபின் இவ்வாண்டின் மே மாதம் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து அம்மன்றங்களை மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபைகள் பொறுப்பேற்றுக் கொண்டன. பெரும்பாலான சபைகளில் தலைவர் தெரிவில் தொடங்கிய இழுபறிகள் இன்றுவரை தொடர்கதையாக இருந்து வருவதை அவதானிக்க முடிகிறது. சபைகளில் உறுப்பினர்களின் நடத்தைகள் தொடர்பாக எதிர்மறையான செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டிருந்தாலும் தற்போது அச்சபைகளின் முதலாவது வரவு செலவுத் திட்டத்துக்கான வாக்கெடுப்பில் அச்சபைகளில் நிலவும் முரண்பாடுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இந்நிலைமைகள் சபைகளின் தற்போதைய செயற்றிறன் தொடர்பாக மட்டுமன்றி அவற்றின் எதிர்காலம் தொடர்பாகவும் பல ஐயங்களைத் தோற்றுவிக்கின்றன.

இந்த ஆண்டின் முற்பகுதியில் மன்றங்களை வழிநடத்தும் பொறுப்பை சபைகள் எடுத்துக்கொண்டாலும் இவ்வாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஏலவே செயலாளர் தலைமையிலான குழுவினால் தயாரிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துவிட்டிருந்தன. அதனால் சபை உறுப்பினர்களின் முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அடுத்த ஆண்டுக்கான அவர்களின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தற்போது சபைகளில் வாக்கெடுப்புக்கு சமர்ப்பிக்கப்படுவதைக் காணமுடிகிறது. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டங்கள் பல வாக்கெடுப்பில் தோல்விகண்டுள்ளன. வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் அதிலும் குறிப்பாக ஆளும் தேசிய மக்கள் கட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட சபைகளின் வரவு செலவுத்திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைமையிலான ஊர்காவற்றுறை பிரதேச சபை மற்றும் வல்வெட்டித்துறை நகரசபைகளின் வரவு செலவுத்திட்டங்கள் வாக்கெடுப்பில் தோல்வி கண்டுள்ளன. இவற்றுள் ஊர்காவற்றுறை பிரேதேச சபையின் திட்டம் இரண்டாவது வாக்கெடுப்பிலும் தோல்வி கண்டுள்ளது.

**பெரும்பாலான சபைகளில், தற்போது வரவு செலவுத் திட்டம் வெற்றிபெறும் சில சபைகளுட்பட, தற்போதைய ஆளுந்தரப்பு மற்றும் தலைமை மாறுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படும். மீண்டும் காலைவாருதல், காலைப்பிடித்தல் தொடரும். கட்சிகளின் பிரிவும் புதிய கூட்டும் அரங்கேறும்.**

அதேவேளை யாழ் மாநகரசபை மற்றும் நல்லூர் பிரதேச சபை ஆகியவற்றின் வரவு செலவுத் திட்டங்கள் வெற்றி பெற்றுள்ளன. ஆனால் யாழ் மாநகரசபையின் திட்டம் இரு வாக்குகளால் மட்டுமட்டாக வெற்றி பெற்றுள்ளது. மாநகரசபையின் தலைவர் தெரிவில் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸுடன் இணைந்து நின்ற ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நால்வர் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தமையாலும் சைக்கிள் சின்னத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறி காந்தாவின் தமிழ் தேசியக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாததாலும் தோல்வி தவிர்க்கப்பட்டது. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் உறுப்பினர்களும் காங்கிரஸின் முடிவை எடுத்திருந்தால் மாநகரசபையின் வரவு செலவுத் திட்டமும் தோல்விகண்டிருக்கும் என்பதே உண்மை. இதேபோல பல சபைகளில் வரும் வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டங்களும் தோல்வி அடைவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. எவ்வாறாயினும் இரு ஆண்டுகளுக்கு அதாவது எதிர்வரும் 2027 மே மாதம் வரையில் சபைகளின் ஆளுந்தரப்புகளுக்கு ஆயுள் கெட்டியாக இருக்கும். ஆனால் நித்திய கண்டமாக அவற்றின் உயிர் ஊசலாடிய வண்ணமே இருக்கும்.

சபைகளின் வரவு செலவுத்திட்டங்கள் மட்டுமன்றி அவற்றின் வழமையான கூட்டங்களும் ஆரோக்கியமற்றவையாக ஏன் இருக்கின்றன? அவற்றுக்கான காரணங்கள் யாவை?

1. சபையின் மக்களுக்கான பணிகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தைவிட கூடிய முக்கியத்துவத்தை தமது கட்சிசார் அரசியலுக்கு கட்சிகள் அளிக்க முனைதல். இதில் ஆளும் தரப்பு, ஆளாத்தரப்பு எவையும் விலக்கானவை அல்ல.

2. களநிலைமைகளைக் கருத்திற்கொண்டு ஏனைய தரப்புகளையும் அணைத்துச் செல்ல ஆளுந்தரப்பு முனையாமை.

3. உறுப்பினர்களின் முதிர்ச்சியின்மையும் கட்சித் தலைமைகளால் சரியாக வழிகாட்டப்படாமையும் அல்லது தவறாக வழிகாட்டப்படுதலும்.

4. இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக அமைந்த உள்ளூராட்சித் தேர்தல் முறை.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தற்போதைய தேர்தல் முறை 2015 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கம் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கம் கொண்ட தேர்தல் திருத்தச் சட்டங்களின் அடிப்படையில் அமைந்தவையாகும். இச்சட்டங்களின் மூலமாக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன் விகிதாசார கலப்புத் தெரிவு முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கமைய 60வீதம் வட்டார உறுப்பினர்களும் 40 வீதம் விகிதாரமுறையிலான உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். உதாரணமாக ஒரு சபையில் 6 பேர் வட்டார உறுப்பினர்கள் இருந்தால் 4 பேர் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இம்முறைமையின் கீழ் ஒரு கட்சி 6 உறுப்பினர்களைப் பெற்றால் மட்டுமே உறுதியான வகையில் மன்றத்தின் ஆயுட்காலமான நான்கு ஆண்டுகளும் ஆளுகையைச் செய்ய முடியும்.

ஆனால் இத்தெரிவு முறையின் கீழ் அவ்வாறாக ஒரு கட்சிப் பெரும்பான்மையைப் பெறுவது கடினமானது. இதற்கு சிறந்த உதாரணம் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகள். இம்மாவட்டத்திலுள்ள அனைத்துச் சபைகளிலும் அதிகாரத்திலுள்ள கட்சி உறுப்பினர்களைவிட ஏனையவர்களின் எண்ணிக்கை அதிகமானது. விளைவு, தலைவர் தெரிவில் போட்டி, ஒரு கட்சி மற்றைய கட்சியின் காலைப் பிடித்தல் அல்லது காலை வாருதல், தலைவர் தெரிவில் வெற்றி பெறாததரப்பு ஆளுந்தரப்புக்குத் தொடர்ந்து குடைச்சல் கொடுத்து வருதல், தற்போது வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடித்தல் என சபைகளில் ஜனரஞ்சகக் காட்சிகள் தொடர்கின்றன. உள்ளூராட்சி மன்றங்களில் ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட தேர்தல் முறை இறுதியில் அதனைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளதைக் காணமுடிகிறது. இது அம்முறையின் தோல்வியா? அல்லது அதனைப் புரிந்து கொள்ளாத கட்சிகளினதும் மக்களதும் தோல்வியா?

பெரும்பாலான சபைகளின் உறுப்பினர் பங்கீடு இவ்வாறு இருக்கும் நிலையில் அதற்கேற்றவாறு சபையின் ஆளுகை உத்திகளை தலைவர் கையாண்டால்தான் தடையின்றி நிர்வாகத்தை நடத்த முடியும். ஆனால் அவ்வாறு செய்வதற்கான ஆளுமைப்பண்புகள் பலரிடம் இல்லாதிருப்பது மட்டுமன்றி பலவிடயங்களில் கட்சிகளின் எதிர்மறையான அழுத்தங்களும் அவர்கள்மீது இருப்பதை அவதானிக்க முடிகிறது. ஒற்றுமையாகவும் சிறப்பாகவும் ஒரு சபையின் நிர்வாகம் நடந்தால் அதிகாரத்திலுள்ள கட்சிக்கு ஆதரவு கூடிவிடும் என்று கருதுபவர்கள் ஒருபுறம், எரிகிற வீட்டில் பிடுங்கிறது இலாபம் எனத் தங்கியிருக்கும் சபையொன்றில் தத்ததமது நோக்கங்களை நிறைவேற்ற முனைபவர்கள் இன்னொரு புறம், மறுபுறத்தில் சபைகளின் மட்டுப்பாடான வளங்கள், வட்டாரங்களின் அதிகரித்த தேவைகளின் அழுத்தங்கள் போன்ற இச்சிக்கல் நிறைந்த களத்தைச் சரியான முறையில் கையாளமுடியாத தலைமைகள் என பல உள்ளூராட்சி மன்றங்கள் சந்தியில் நிற்கின்றன.

இவ்வாறான சிக்கல் நிறைந்த களத்தை உறுப்பினர்களின் ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, கூட்டுமுயற்சி, சரியான தலைமைத்தவம் போன்றவற்றின் மூலமே வெற்றி கொள்ள முடியும். இதற்கு உறுப்பினர்களுக்கு உள்ளூராட்சி மன்றத்தின் நோக்கம், சட்டங்கள், அதிகாரங்கள், பற்றிய தெளிவும் இவ்விடயங்களை கையாள்வதிலான அனுபவ முதிர்ச்சியும் அவசியமாகும். இவைபற்றிய போதிய தெளிவு பெரும்பான்மையான உறுப்பினர்களிடம் காணப்படாமையே சபைகளின் இன்றைய பிரச்சினைகளுக்கான பிரதான காரணம். இதனை உணர்ந்து ஒருசில சபைகள் இயங்கினாலும் பெரும்பாலான சபைகளில் ஆளுந்தரப்புடன் பிரச்சினைகள், கட்சிகளுக்கிடையில் பிரச்சினை, கட்சிக்குள் பிரச்சினை, பணியாளர்களுடன் பிரச்சினை, பயனாளிகளுடன் பிரச்சினை எனப் பிரச்சினைகளின் வடிவமாக அச்சபைகள் மாறியுள்ளன. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக அவற்றை எப்படிப் பெரிது படுத்தலாம் என்பதில் சில அரசியல் கட்சி உறுப்பினர்கள் அக்கறை காட்டுகின்றனர். அவர்களுக்குத் துணையாகக் குரல்கொடுக்க சில் எடுபிடிகளும் அதற்காகவே காத்துக்கிடக்கும் சில ஊடகங்களும் குறிப்பாகச் சமூக ஊடகங்களும் இருப்பதைக் காண முடிகிறது. குரங்கும் அப்பமும் கதையின் முடிவுக்காக தேசிய மக்கள் சக்தி முனைவதையும் மறுக்க முடியாது.

சபைகளின் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் தலைவருக்குச் சட்டத்தினூடாக வழங்கப்பட்ட தற்றுணிவு அதிகாரத்துக்கமைய இரண்டு வருடங்கள் தற்போதைய சண்டை சச்சரவுகளுடன் சபையை இழுத்துச் செல்லமுடியும். அதன்பின் இச்சபைகளின் எதிர்காலம் எவ்வாறு அமையும்? நிச்சயமாக ஆரோக்கியமாக அமையப்போவதில்லை. பெரும்பாலான சபைகளில், தற்போது வரவு செலவுத் திட்டம் வெற்றிபெறும் சில சபைகளுட்பட, தற்போதைய ஆளுந்தரப்பு மற்றும் தலைமை மாறுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படும். மீண்டும் காலைவாருதல், காலைப்பிடித்தல் தொடரும். கட்சிகளின் பிரிவும் புதிய கூட்டும் அரங்கேறும். நடத்துநர் சாரதியாகவும் சாரதி நடத்துநராகவும் மாறுவர். ஆனால் வாகனம் முன்னைய பிரச்சினைகளுடன்தான் பயணமாகும். பயணிகள் தான் பாவம். இத்தேர்தல்முறை மாறாதவரை அல்லது நாம் மாறாதவரை இப்பயணம் இப்படியேதான் இருக்கப்போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தை நோக்கிப் போதல்!



நிலாந்தன்

டித்வா புயலால் தமிழ்த் தரப்பில் அதிகம் பாதிக்கப்பட்டது மலையகத் தமிழர்கள்தான். மலையகத்தில் வெள்ளம், புயல், மண்சரிவு ஏற்படும்போது அங்கே உறக்கத்திலேயே மண்மூடி இறந்தவர்கள் அதிகமாக ஏழைகள்தான். மேல் நடுத்தர வர்க்கம் அவ்வாறு இறப்பது குறைவு. மலையகத்தில் உள்ள பெரும்பாலான சுற்றுலா விடுதிகள், தேயிலை பதப்படுத்தும் தொழிற்சாலைகள் போன்றன இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படுவது ஒப்பீட்டளவில் குறைவு. ஏனென்றால் செல்வந்தர்கள் தங்கள் வீடுகளையும் தொழிற்சாலைகளையும் பாதுகாப்பான இடங்களில் கட்டுகிறார்கள். ஆனால் ஏழைகள் மலை விளிம்புகளில், மண் சரியக்கூடிய இடங்களில் வீடுகளைக் கட்டுவதனால் இயற்கை அனர்த்தங்களின் போது முதற் பலியாகிறார்கள்.

காலாகாலமாக இயற்கை அனர்த்தங்களின் போது மட்டுமல்ல, இன முரண்பாடுகளின் போதும் உடனடியாகச் சுற்றி வளைக்கப்படும் மக்களாக, இன அழிப்புக்கு உள்ளாகும் மக்களாக அவர்களே கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாகக் காணப்படுகிறார்கள்.

அவர்கள் மலிவான கூலிகளாக இச்சிறிய தீவுக்குள் கொண்டு வரப்பட்ட போதும் ஏறக்குறைய அடிமைகள் போலவே கொண்டுவரப்பட்டார்கள். அடிமைகள் போலவே நடத்தப்பட்டார்கள். அங்கிருந்து தொடங்குகிறது இன அழிப்பு.

அடுத்த கட்டம் மலையகத் தமிழரின் சனத்தொகையானது தென்னிலங்கைக்குள் ஒரு பெரிய தமிழ்ச் சனத்தொகையாகப் பல்கிப் பெருகுவதைத் தடுப்பதும், அதன்மூலம் ஈழத் தமிழர்களோடு அவர்கள் இணைந்து இலங்கைத் தீவில் மொத்தத் தமிழ்ச் சனத்தொகையைப் பலப்படுத்துவதைத் தடுக்கும் உள்நோக்கத்தோடும், மலையக தமிழர்களுடைய குடியுரிமை பறிக்கப்பட்டது. இப்படிப்பார்த்தால் இலங்கையில், தமிழ் இனஅழிப்பின் தொடக்கம் மலையகம்தான்.

அதன்பின் காலத்துக்குக் காலம் இடம் பெற்ற இன அழிப்பு நடவடிக்கைகளின் போது முதலில் பலியாவது மலையக மக்கள்தான். அவ்வாறு பாதிக்கப்பட்ட மலையக மக்கள் வடக்கு கிழக்கு நோக்கி வந்திருக்கிறார்கள். வடக்கு கிழக்கில் அவர்கள் கௌரவமாக நடத்தப்பட்டார்கள் என்று கூறமுடியாது. ஏழை மலையகத் தமிழர்கள் வடக்கில் வீட்டு வேலைக்காரர்களாக, கடைகளிலும் வன்னிப் பெருநிலத்தில் வயல்கள் தோட்டங்களிலும் மலிவுக் கூலிகளாக வேலை செய்தார்கள்.

வடக்கு கிழக்குக்கு வந்த மலையக மக்களை ஒப்பீட்டளவில் கௌரவமான நிலைக்கு உயர்த்திய நகரங்கள் இரண்டு. ஒன்று கிளிநொச்சி. மற்றது வவுனியா. அதிலும் கிளிநொச்சிதான் மலையகத் தமிழர்களை ஒப்பீட்டளவில் சமூகத்தில் எல்லா மட்டங்களிலும் உயர் நிலைக்கு உயர்த்தியது. அது ஒரு குடியேற்றப் பட்டினம் என்பதனால், அங்கே மலையகத் தமிழர்கள் ஒப்பீட்டளவில் எல்லா வாய்ப்புகளையும் பெற்றார்கள். கிளிநொச்சியின் பெரிய வியாபாரிகளாக, மருத்துவர்களாக,



ஆசிரியர்களாக, அதிபர்களாக, கல்வி அதிகாரிகளாக, நிர்வாகிகளாக, பொறியியலாளர்களாக, ஊடகவியலாளர்களாக, இன்னபிறவாக.. மலையகத் தமிழர்கள் அங்கே பலமாகக் காணப்படுகிறார்கள். ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகப்பற்றற்ற ஒரு கணக்கெடுப்பின்படி அங்கே மொத்த சனத்தொகையில் அவர்களுடைய சனத்தொகை 40% இற்கும் குறையாது.

வவுனியாவில் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில், அங்கே மலையகத் தமிழர்களைக் குடியமர்த்தும் வேலைகளை "காந்தியம்" ஒருங்கிணைத்தது. இவ்வாறு குடியமர்த்தப்பட்ட மலையகத் தமிழர்களில் ஒரு பகுதியினர் எல்லைப்



புறங்களில் சிங்கள குடியேற்றவாதிகளுக்கும் தமிழ்மக்களுக்கும் இடையிலான மனிதக் கவசங்களாகக் குடியமர்த்தப்பட்டார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு உண்டு. ஆனால் காந்தியம் அதை அவ்வாறு கருதிச் செய்யவில்லை என்பது, காந்தியத்தின் முக்கியஸ்தர்களை, அவர்களுடைய வாழ்க்கைக்கூடாக அறிந்து வைத்திருக்கும் எவருக்கும் தெரியும்.

இன்று வவனியாவில் தமிழ்ச் சனத்தொகையை, குறிப்பாக தேர்தல்களில் தமிழ் வாக்குகளின் ஒரு பகுதியைக் கட்டியெழுப்புவது மலையகத் தமிழர்கள் தான். அதாவது வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான எல்லையில் தமிழ்ச் சனத்தொகையைப் பாதுகாப்பதில் மலையகத் தமிழர்களுக்குப் பங்குண்டு.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், மலையக மக்களுக்கு பாதுகாப்பான காணியுரிமையை வழங்குவதற்கு மறுத்தால் மாற்று யோசனையாக மலையக மக்களை வடக்கு-கிழக்கில் குடியேற்ற வேண்டும் என்று மனோ கணேசன் கூறியிருக்கிறார். அதேசமயம்,பாதிக்கப்பட்ட மலையகத் தமிழர்களை வடக்குக்கிழக்குக்கு வருமாறு சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகனும் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரனும் அழைப்பு விடுத்திருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கிலிருந்து இவ்வாறு அழைப்பு விடுக்கப்படுவது இதுதான் முதல் தடவையல்ல, புளட் இயக்கத்தில் இருந்தவரும் மூத்த கவிஞரும், இப்பொழுது திரைப்படக் கலைஞராக இருப்பவருமாகிய, வ.ஐ.ச.ஜெயபாலன் இரு தசாப்தங்களுக்கு முன்பு தென்னிலங்கைப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அதைச் சுட்டிப்பாகக் கூடியிருந்தார். மலையகத் தமிழர்களை வடக்கு கிழக்கில் குடியேற்ற வேண்டும் என்று. அப்பொழு

> ஈழத்து தமிழர்கள் மலையகத்தை நோக்கிச் செல்ல வேண்டியது ஈழத் தமிழர்களுடைய தவிர்க்கப்பட முடியாத ஒரு தேசியக் கடமை. மலையகத் தமிழரை அவர்களுடைய தாயத்தில் வைத்தே பலப்படுத்த வேண்டும். புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் அதை நோக்கி தன்னால் முடிந்த எல்லாவறையும் செய்ய வேண்டும் ஒரு பேரிடர் காலம் தமிழ் ஐக்கியத்தை, தமிழ் சகோதரத்துவத்தைப் பலப்படுத்தியிருக்கிறது.

தும் அந்தப் பேட்டிக்கு எதிர் வினைகள் வந்தன. இப்பொழுதும் சுமந்திரன் மற்றும் ஆறு.திருமுருகனின் அழைப்புகளுக்கு அவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப் படுகின்றன.

மலையகத் தமிழர்களையும் உள்ளடக்கிய ஈழ வரைபடத்தை வரைந்து வைத்திருந்தது ஈரோஸ் இயக்கம்தான். மலையகத்தையும் உள்ளடக்கிய தமிழீழம் என்பது ராணுவரீதியாக மலையகத்தை முதலில் பலியிடுவதாக முடியும் என்று அப்பொழுது விமர்சிக்கப்பட்டது. ஏனென்றால் மலையகம் நிலத்தால், சிங்களக் கிராமங்களால் சூழப்பட்ட ஒரு தமிழ் நிலப் பரப்பு. எனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அவர்களையும் ஆயுதமயப்படுத்தினால் அது அந்த சமூகத்தை முதலில் பலியிடுவதாக முடியும் என்று சுட்டிக் காட்டப்பட்டது.

தமிழ் மக்களுடைய சுதந்திரப் போராட்டத்தில் முன்னணித் தளபதிகளாக பல மலையகத் தமிழர்கள் இருந்திருக்கிறார்கள். குறிப்பாக கிளிநொச்சியில் இருந்து எழுச்சி பெற்ற பல தளபதிகள், இடைநிலைத் தளபதிகள், அரசியல் பிரிவு முக்கியஸ்தர்கள் உண்டு. ஈழப் போராட்டம் மலையகத் தமிழர்களுக்கு கௌரவமான, மதிப்பு மிகுந்த இடத்தைக் கொடுத்தது.

தமிழர்களுடைய விடுதலைப் போராட்டத்தின் முக்கிய அறிவு ஜீவிகளில் ஒருவராகிய மு.திருநாவுக்கரசு தன்னுடைய ஐ "இலங்கை அரசியல் யாப்பு: டொனமூரிலிருந்து இருந்து சிறுசேன வரை" என்ற நூலில் ஓரிடத்தில் பின்வருமாறு கூறுகிறார். "மலையகத் தமிழரின் பிரச்சினையில், அவர்கள் வாழும் மாலையகத்தைச் சார்ந்த புவியியல் பின்னணியில், அவர்களுக்குரிய ஓர் அரசியல் நிர்வாகப் பிரிவைக் கோரும் உரிமை அவர்களுக்கு உண்டு. (உதாரணமாக இந்தியாவில் புதுச்சேரி மாநிலம் இருப்பது போன்ற அமைப்பு). அந்த வகையில் அவர்களுக்கான தீர்வு புதிய யாப்பில் உருவாக்கப்பட வேண்டும்.

அதேவேளை மலையகத் தமிழர் விரும்புமிடத்து, ஈழத்தமிழ் மாநிலத்தின் குடிமக்களாகக் குடியேறும் உரிமை உடையவர் என்பதை ஈழத்தமிழ் மாநிலம் தனது யாப்பில் உறுதிப்படுத்த வேண்டும். மேலும் அவ்வாறு ஈழத்தமிழ் மாநிலத்தில் குடியேற விரும்பும் மலையத் தமிழர்களுக்கு காணி மற்றும் வீட்டு வசதிகளை ஈழத்தமிழ் மாநில அரசு செய்து கொடுக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு குடியேறிய குடும்பங்களில் ஒருவருக்காவது வேலைவாய்ப்பை வழங்கவேண்டிய பொறுப்பும் ஈழத்தமிழ் மாநில அரசுக்குரியதாகும்."

மலையகத் தமிழர்களை ஈழத் தமிழ் நோக்கு நிலையில் இருந்து ஓர் இறுதித் தீர்வில் எவ்வாறு இணைக்க வேண்டும் என்பதற்கு திருநாவுக்கரசு முன்வைக்கும் முன்மொழிவு அது. அதேசமயம் மலையகத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக வரையறுத்து இறுதித் தீர்வில் அவர்களுக்கும் ஒரு பொருத்தமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பது, கடந்த 16 ஆண்டுகளுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ்த் தேசியத் தரப்பால் முன்மொழிக்கப்பட்ட தீர்வு முன்மொழிவுகளில் கூறப்பட்டுள்ளது.

நிலத்தைத்தவிர அதாவது தாயகத்தைத் தவிர, மற்ற எல்லா விடயங்களிலும் ஒரு தேசிய இனத்துக்குரிய பெரும்பாலான பண்புகளைக் கொண்டிருக்கும் இரண்டு மக்கள் கூட்டங்களும் தீர்வு முயற்சிகளில் ஒன்றிணைந்து செயற்படுவதே பலம். மலையகத் தமிழர் மத்தியில் ஒரு பலமான நடுத்தர வர்க்கம் மேலெழுந்துவிட்டது. ஒரு தேசிய இனமாக மலையகத் தமிழர்களைக் கட்டியெழுப்ப அவர்களால் முடியும். ஓர் இணைத் தேசிய இனமாக, ஈழத்து தமிழர்கள் மலையகத்தை நோக்கிச் செல்ல வேண்டியது ஈழத் தமிழர்களுடைய தவிர்க்கப்பட முடியாத ஒரு தேசியக் கடமை. மலையகத் தமிழரை அவர்களுடைய தாயத்தில் வைத்தே பலப்படுத்த வேண்டும். புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் அதை நோக்கி தன்னால் முடிந்த எல்லாவறையும் செய்ய வேண்டும் ஒரு பேரிடர் காலம் தமிழ் ஐக்கியத்தை, தமிழ் சகோதரத்துவத்தைப் பலப்படுத்தியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சர்வதேச நாணயநிதித்துடனான உடன்படிக்கையை அரசாங்கம் புதுப்பிக்கவேண்டும்!

## சூறாவளி அழிவையடுத்து கோரிக்கைகள் அதிகரிப்பு



- மீராசிறினிவாசன் -

**டித்வா** சூறாவளியின் விளைவான அழிவுகளில் இலங்கை உழன்று கொண்டிருக்கும் நிலையில், மக்களைத் துன்புறுத்தும் சிக்கன நடவடிக்கைகளை திணிப்பதாக விமர்சகர்கள் கூறும் சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தை மீளாய்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் உரத்து ஒலிக்கத் தங்கியிருக்கின்றன.

நவம்பர் பிற்பகுதியில் இலங்கைக்குஅழிவுகளை ஏற்படுத்திய அடைமழை, முன்னென்றும் இல்லாத வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளில் குறைந்தபட்சம் 638 பேர் கொல்லப்பட்டதுடன் 191 பேர் காணாமல் போயிருக்கின்றனர். இலங்கை கண்டமிகவும் மோசமான காலநிலை அனர்த்தங்களில் ஒன்றான டித்வா சூறாவளி, மூன்று வருடங்களுக்கு முன்னரான பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் பிரகடனம் செய்யப்பட்ட வங்குரோத்து நிலையில் இருந்து மெதுவாக இலங்கை கண்டுவரும் மீட்சிக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

காலநிலை மாற்ற அனர்த்தத்தை தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டிருக்கும் அவல நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் அரசாங்கத்தை கடந்தவாரம் கேட்டுக்கொண்ட எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, மக்களின் இடர்பாடுகளை மேலும் மோசமாக்கும் நிபந்தனைகளை இடைநிறுத்த அல்லது திருத்தியமைக்க அந்தநிதியத்துடன் உடனடியாக பேச்சுவார்த்தைளை தொடங்குமாறு வலியுறுத்தியிருக்கிறார்.

2022 ஆம் ஆண்டின் மோசமான பொருளாதார நெருக்கடி இலங்கையின் சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமானோர் பலவழிகளில் பாதிக்கப்படும் நிலைவரத்தை ஏற்படுத்தியிருந்ததுஎன்ற 2022 - 2023 ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டது. ஒப்பீட்டளவில் வருவாய் உறுதிப்பாட்டை இலங்கையினால் சாதிக்கக்கூடியதாக இருந்த போதிலும், சர்வதேச நாணய நிதியத்தினால் விதந்துரைக்கப்பட்ட செலவினக் குறைப்புகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாட்டின் வறியமக்களின் நிலைமேலும் மோசமாகியது.

அண்மைய இயற்கை அனர்த்தத்தை எழுபதுக்கும் அதிகமானசிவில் சமூகக் குழுக்களும் செயற்பாட்டாளர்களும் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை, கடன் மற்றும் காலநிலை நீதி குறித்து மீள்பேச்சுவார்த்தையை நடத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

"பிற்போக்கானவரி அதிகரிப்புகள், மானியங்கள் குறைப்பு மற்றும் போதுமானதல்லாத சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் உட்பட சிக்கன நடவடிக்கைகளின் கீழ் மக்களின் பெரும்பான்மையானவர்கள் உழன்று கொண்டிருக்கும் அதேவேளை, தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சர்வதேச நாணயநிதியத்தின் விரிவுபடுத்தப்பட்ட நிதி வசதி திட்டத்தின் சிறைக்கைதியாக இலங்கை அரசாங்கம் மாறியிருக்கிறது" என்று அவர்கள் 2025 டிசம்பர் 8 வெளியிட்ட தங்களின் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

"அரசாங்க செலவினத்தை சர்வதேச நாணயநிதியம் கட்டுப்படுத்துவது தற்போதைய மனிதாபிமான நெருக்கடியை கையாளுவதில் அரசாங்கத்தின் ஆற்றலை கட்டுப்படுத்துவது மாத்திரமல்ல, உட்கட்டமைப்புகளில் முதலீடுகளையும் வாழ்வாதாரங்களை மீளப் பெறுவதிலும் மேலும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை சமாளிக்கக் கூடியதாக இசைவாக்கத்தைப் பெறுவதையும் தடங்கலுக்கு உள்ளாக்குகிறது" என்றுவாதிடும் அவர்கள் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கையைஅவசரமாக மீளாய்வு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். பாரியகடன் குறைப்பு, மானியங்கள் நீக்கத்தைநிறுத்தல், நாட்டின் மீட்சிக்காக கடனை தற்போதும் எதிர்காலத்திலும் மீளச் செலுத்துவதை உடனடியாக நிறுத்துதல் ஆகியவற்றையும் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இயற்கை அனர்த்தத்தின் பேரழிவில் இருந்து நாட்டை மீட்க முயற்சிக்கின்ற அதேவேளை, அரசாங்கம் 2026 ஆம் ஆண்டில் 200 கோடி அமெரிக்க டொலர்கள் கடனை மீளச்செலுத்த வேண்டியிருக்கிறது. இயற்கை அனர்த்தத்தின் பாதிப்புக்கள் இன்னமும் முழுமையாக மதிப்பிடப்படவில்லை. இலங்கையை பொறுத்தவரை, கடந்த வார அழிவுகளில் இருந்துமீட்சி பெறுவது என்பது 2004 இந்து சமுத்திர சுனாமிக்கு பின்னரான மீட்சியை விடவும் மிகவும் கடுமையானதாக இருக்கக்கூடும் என்று அபிவிருத்தி நிபுணர்கள் சிலர் கூறியிருக்கிறார்கள்.

இலங்கை எதிர் நோக்கும் பாரிய சவாலை ஒத்துக்கொண்டிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, (டிசம்பர் 8 வெளியான நியூஸ்வீக் பேட்டியொன்றில்) "எமது நாடு இதுகாலவரையில் சந்தித்த எந்தவொரு இயற்கை அனர்த்தத்தின் விளைவாக ஏற்பட்ட சேதத்தைவிடவும் கூடுதலான சேதத்தை அண்மைய சூறாவளி ஏற்படுத்தியிருக்கிறது என்று ஆரம்பக்கட்ட மதிப்பீடுகள் காட்டுகின்றன. அதனால், நாம் கடனையும் மீளச் செலுத்திக் கொண்டு அதே வேளைகால நிலை அனர்த்தங்களில் இருந்தும் நாட்டை மீளக்கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. அதன் காரணத்தினால்தான் காலநிலை மாற்றங்களினால் பெரிதும் பாதிக்கப்படக் கூடியவையாக இருக்கும் நாடுகளுக்கான கடன் பேண்தகு கட்டமைப்புகள் மாற்றப்பட வேண்டும்" என்று கூறினார்.

இலங்கை எதிர்நோக்கும் இக்கட்டான நிலை குறித்து கருத்து தெரிவித்த மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முஹம்மத் நஷீத், சர்வதேசநாணய நிதியத்தின் செயற்திட்டத்தின் பிரகாரம் தொடர்ந்தும் இலங்கை செயற்படுவதை காலநிலை அனர்த்தம் சாத்தியமற்றதாக்குகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"2022 ஆம் ஆண்டில் இலங்கை நிதிநெருக்கடியை எதிர்நோக்கிய போதுசிலமாதகால பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு நான்குவருடகாலத்துக்கான விரிவுபடுத்தப்பட்ட கடனுதவியை சர்வதேசநாணய நிதியம் அங்கீகரித்தது. ஆனால், கடன்பேண்தகு ஆய்வுகால நிலை மாற்றத்தின் விளைவான அதிர்ச்சிகளை கணக்கில் எடுக்கத் தவறிவிட்டது " என்றுஅவர் சமூகஊடகப் பதிவு ஒன்றில் கூறினார்.

இலங்கை மாத்திரமல்ல, கடன்சுமையில் சிக்கியிருக்கின்ற அதேவேளை காலநிலைமாற்றத்தினால் பாதிப்புக்குள்ளாகும் பல்வேறுநாடுகளும் இதேபோன்ற இக்கட்டானநிலையில் இருக்கின்றன. காலநிலைமாற்றத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகின்ற எழுபதுக்கும் அதிகமான நாடுகளின் சர்வதேச கூட்டமைப்பு கடன்பேண்தகு ஆய்வை மறுசீரமைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கைவிடுத்து வருகின்றது என்று அதன் செயலாளர் நாயகமான நஷீத் கூறினார்.

ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தில் இருந்து இலங்கை விலகிச்செல்லக்கூடிய அறிகுறி எதுவும் இன்னமும் தெரியவில்லை. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து துரித நிதியுதவி திட்டத்தில் இருந்து 20 கோடி டொலர்களை உதவியாகக் கோரியிருக்கிறது. அண்மைய வருடங்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் விரிவுபடுத்தப்பட்ட கடனுதவி திட்டத்தின் ஐந்தாவது மீளாய்வுக்கு முன்னதாக இலங்கையின் அவசர கால நிதியுதவிவேண்டுகோளுக்கு முன்னுரிமை கொடுக்க விருப்பதை சர்வதேச நாணயநிதியத்தின் பேச்சாளர் உறுதிப்படுத்தினார்.

அதேவேளை, அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பொருளாதார ரீதியிலும் சமூகரீதியாகவும் பின்தங்கிய பிரிவுமக்கள் மீது கூடுதல் கவனம் செலுத்தி ஒப்புரவான முறையில் அவசர நிவாரணங்களை வழங்குவதற்கு முன்னுரிமை கொடுக்கமாறு செயற்பாட்டாளர்கள் அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

"பெருமளவு உயிரிழப்புக்களும் அழிவுகளும் பதுளை, கண்டி, கேகாலை, மாத்தளை, நுவரேலியாஆகிய மாவட்டங்களில் இருந்தே அறிவிக்கப்பட்டிருக்கிறது. மண்சரிவு ஆபத்தை பெருமளவில் கொண்டிருக்கும் பகுதிகளையும் ஏற்கெனவே பின்தங்கியவர்களாகவும் பாதிக்கப்படக் கூடியவர்களாகவும் இருக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தினரையும் கொண்டவையாக இந்த மாவட்டங்களே விளங்குகின்றன" என்று பொருளாதார நீதிக்கான பெண்ணியவாதிகள் கூட்டமைப்பு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

இத்தகைய பின்புலத்தில், கடனை மீளச்செலுத்துவதை ரத்துச் செய்வது குறித்தும் சிக்கனக் கொள்கைகளை மாற்றியமைப்பதற்கும் சர்வதேச நாணயநிதியத்துடனும் மற்றைய கடன் வழங்குநர்களுடனும் அவசரமாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை கேட்டிருக்கும் அந்த அமைப்பு சகலருக்குமான சமூகப் பாதுகாப்பு திட்டங்களை வகுக்குமாறும் வலியுறுத்தியிருக்கிறது.

( தி இந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புட்டினின் இந்திய வருகை எதிரொலி: மோடியை மீள அரவணைக்கும் ட்ரம்ப்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலக அரங்கில் அரசியல் மாற்றங்கள் பாரியளவில் மாறி வருகின்றன. தற்போது மீண்டும் இந்தியா தான் எங்கள் முக்கியமான கூட்டாளி நாடு என அமெரிக்கா அறிவித்துள்ளது. இதற்கு முக்கிய காரணமாக இருப்பது புட்டினின் இந்திய வருகையின் எதிரொலி தான்.

ஐரோப்பிய நாடுகள் உக்ரேனுக்கு முண்டு கொடுத்து போரை நிறுத்தாமல், ரஷ்யாவை தொடர்ந்து பரம விரோதியாகவே தொடர்ந்து பார்த்து வருகின்றனர். அமெரிக்காவின் அமைதி திட்டத்தை காரணம் இல்லாமல் தட்டிக் கழிப்பதுடன் போர் நிறுத்தம் செய்ய ஐரோப்பிய நாடுகள் மறுத்து வருகின்றன. இது தற்போதைய உலக அரசியலில் பெரும் விவாதங்களை கிளப்பியுள்ளதுடன், மாறி வரும் அரசியல் சூழலையும் ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்த வேளையிலே புட்டினின் இந்தியா வருகையின் எதிரொலியால், மோடியை மீள அரவணைக்கும் அளவுக்கு ட்ரம்ப் தள்ளப்பட்டுள்ளார். இதற்குரிய முக்கிய காரணம் பொருளாதார நலன் சார்ந்தது தான்.

**"அமெரிக்கா முதலில்" கொள்கை:**


அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதை தொடர்ந்து 'அமெரிக்கா முதலில்' என்ற கொள்கையை பின்பற்ற தொடங்கினார். மேலும் இந்தியா மீதான கடுமையான பொருளாதார வரிகளை ஆரம்பம் முதலே தொடர்ந்தார்.

குறிப்பாக இந்தியா மீது அதிகபட்சமாக ஐம்பது சதவீதம் இறக்குமதி வரிவிதிப்பு, சட்டவிரோதமாக குடியேறியதாக கூறி இந்தியர்களை கைவிலங்கிட்டு நாடு கடத்தியது, இந்தியர்கள் அதிகம் பெறும் அமெரிக்காவின் எச்-1பி விசா கட்டணத்தை 1 மில்லியன் டாலர்கள் உயர்த்தி அறிவித்தது உள்ளிட்ட பல்வேறு அழுத்தங்களை அவர் கொடுத்தார்.

இதனால் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி, அமெரிக்காவில் இருந்து உழைத்து அனுப்பப்படும் பணம் உள்ளிட்டவை சரிந்து பொருளாதாரம் வெகுவாக பாதித்தது. இருப்பினும் இதையும் இந்தியா கண்டு கொள்ளாமல் இருந்தது. குறிப்பாக இந்த நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் அமெரிக்க தடைகளை கடந்து 7.3 சதவீதமாக உயரும் என இந்திய மத்திய வங்கி வட்டாரங்களும், பல அமெரிக்க பொருளாதார நிறுவனங்களும் கணித்துள்ளன.

இத்தகைய உலக அரசியல் சூழலில் ரஷ்ய அதிபர் புட்டின் அரசுமுறை பயணமாக இந்தியா வந்தார்.

இந்திய அரசு ரஷ்யா உடன் நட்பு பாராட்டி வருகிறது. அதேபோல் அமெரிக்கா அரசுடன் பொருளாதார ஒத்துழைப்பையும் பேணி வருகிறது. புதிய வரிகளால் இந்திய பொருளாதாரம் மேலும் பாதிக்கப்பட்டாலும், அரசியல் ரீதியாகவும் நட்புறவை மேம்படுத்தி வருகிறது.



இந்நிலையில் புட்டினின் இந்திய பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டது. நீண்ட காலமாக ரஷ்ய அரசை தனிமைப்படுத்த ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும் முயன்று வந்தன. ஆனால் தற்போது ரஷ்யா தனது சுய பொருளாதார பலத்தில் உறுதியாக முன்னேறி வருகிறது என்று அமெரிக்க வெளியுறவுத் துறை மட்டுமின்றி, உலக பொருளாதார அமைப்பின் கூட்டமைப்பே தெரிவித்துள்ளது.

இந்த நிலையில்தான் அமெரிக்க அதிபர் மூலோபாய பொருளாதார ரீதியாக இந்திய அரசை மீண்டும் அரவணைத்து செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். ரஷ்ய அதிபர் புட்டினும் இந்தியா கூட்டாளி என்கிற அந்தஸ்தை கடந்து தங்களுடைய நீண்டகால நண்பராக காட்டி வருகிறார்.

அத்துடன் இந்தியாவின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளை செய்ய தயாராக இருப்பதாக புட்டின் தெரிவித்துள்ளார். ஒரு நாட்டின் பொருளாதாரம் அதன் ஆற்றல், ராணுவம், வர்த்தகம் அதற்கான மூலப்பொருட்களை உள்ளடக்கியது. இந்தியா போன்ற பெரிய மக்கள் தொகை கொண்ட நாட்டிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் ரஷ்ய அதிபர் புட்டின் அளிப்பதாக கூறியது அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளை கதிகலங்க செய்துவிட்டது







**புட்டினின் இந்தியா வருகையின் எதிரொலியால், மோடியை மீள அரவணைக்கும் அளவுக்கு ட்ரம்ப் தள்ளப்பட்டுள்ளார். இதற்குரிய முக்கிய காரணம் பொருளாதார நலன் சார்ந்தது தான். ஐரோப்பிய நாடுகள் உக்ரேனுக்கு முண்டு கொடுத்து போரை நிறுத்தாமல், ரஷ்யாவை தொடர்ந்து பரம விரோதியாகவே தொடர்ந்து பார்த்து வருகின்றனர். அமெரிக்காவின் அமைதி திட்டத்தை தட்டிக் கழிப்பதுடன் போர் நிறுத்தம் செய்ய ஐரோப்பிய நாடுகள் மறுத்து வரும் சூழலில் புட்டினின் இந்திய வருகை முக்கியத்துவம் பெறுகிறது.**

என்றே சொல்லலாம்.

**வேற்றுமையில் ஒற்றுமை :**

புட்டினின் இந்திய வருகை, மேற்கத்திய நாடுகளின் புறக்கணிப்பை முறியடித்தல், இந்தியா-ரஷ்ய உறவை வலுப்படுத்துதல், குறிப்பாக பாதுகாப்பு மற்றும் எரிசக்தி துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது போன்ற விடயங்களே முதன்மை நோக்கமாக இருந்தன.

இந்தியாவை வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடாகப் புட்டின் பாராட்டியதுடன், மற்றும் புவிசார் அரசியல் தாக்கங்கள் குறித்து பரவலான விவாதங்களையும், பாராட்டுகளையும் இந்திய அரசு பெற்றுள்ளது. ஆனால் மேற்கத்திய நாடுகளின் அவதானம் இந்திய அரசின் மீது மேலும் அதிகரித்துள்ளது. ரஷ்யாவுடனான இந்தியாவின் நெருக்கத்தை மேற்கத்திய நாடுகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன.

2021க்கு பிறகு புட்டினின் இந்தியா வருகை, இரு நாடுகளின் சிறப்பு வாய்ந்த உத்தி கூட்டாண்மையை மேலும் உறுதிப்படுத்துகிறது.

பாதுகாப்பு, எரிசக்தி, ஆயுதங்கள், போன்ற முக்கிய துறைகளில் இந்தியா-ரஷ்யா இடையேயான ஒப்பந்தங்கள் மற்றும் ஒத்துழைப்பு முக்கியத்துவம் பெறுகின்றன.

இதேவேளை இந்தியா தனது பன்முகத்தன்மையில் ஒற்றுமையைக் கண்டிருப்பதாக புட்டின் புகழ்ந்துரைத்துள்ளார். உக்ரைன் போர் மற்றும் உலகளாவிய அரசியல் பதட்டங்களுக்கு மத்தியில் இந்த வருகை, இந்தியா தனது நடுநிலைமையையும், ரஷ்யாவுடனான உறவையும் தொடர்வதைக் காட்டுகிறது.



புட்டினின் இந்திய வருகை இருதரப்பு உறவை வலுப்படுத்துவதோடு, உலக அரசியலில் இந்தியாவின் நிலைப்பாட்டை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறது.

**அமெரிக்கா புதிய தேசிய பாதுகாப்பு கொள்கை:**

இந்த நிலையில் அமெரிக்கா புதிய தேசிய பாதுகாப்பு கொள்கை என்ற பெயரில் தமது கொள்கையை திருத்தி வெளியிட்டுள்ளது. அதில் இந்தியாவை முக்கிய கூட்டாளி நாடாக அறிவித்துள்ளது. வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் உலக பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு நிலைத்தன்மை, தொழில்நுட்ப முன்னேற்றம் அகியவற்றில் இந்தியா முக்கிய சக்தியாக உள்ளது. அதனால் இந்தியாவுடன் நீண்டகால நட்புறவை வலுப்படுத்துவது, அமெரிக்காவின் பாதுகாப்பு குறிக்கோளில் முக்கிய அங்கமாக இணைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ட்ரம்பின் வெளியுறவு கொள்கைகளை ராணுவ தலைமையகமான பெண்டகனின் முன்னாள் அதிகாரி மைக்கேல் ரூபின் விமர்சித்துள்ளார். இந்தியா உடனான ட்ரம்பின் வெளியுறவு கொள்கைகள் பெரும் பிழையை ஏற்படுத்திவிட்டது. இதனால் நீண்டகால நட்புறவில் இருந்த இந்தியாவை ரஷ்யா உடன் சாய செய்துவிட்டது. ரஷ்யா உடன் இந்தியா செயல்பட செய்ததற்காகவே ட்ரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு கொடுக்க வேண்டும் என அவர் விமர்சித்தார்.

**இந்திய - ரஷ்ய உறவு:**

உக்ரேனிய போருக்கு பின்னர் இந்திய - ரஷ்ய பொருளாதார உறவு மேலும் வலுவடைந்து உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பார்த்தால், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எட்டு பில்லியன் டாலராக இருந்த வர்த்தகம் இப்போது 68 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

ரஷ்யாவிற்கு எதிராக மேற்கத்திய நாடுகள் விதித்த தடைகள் இருந்த போதிலும், இந்தியா ரஷ்யாவிடம் இருந்து மசகு எண்ணெய் வாங்குவதைத் தொடர்கிறது. இந்திய இராணுவம் இன்றும் ரஷ்யாவிடமிருந்து பெற்ற ஆயுதங்களை நம்பியே உள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்ய அதிபர் புட்டின்



இந்தியா வந்தபோது இருந்த உலகம் இப்போது கணிசமாக மாறியுள்ளது. அந்தப் பயணத்திற்குப் பிறகுதான் ரஷ்யா உக்ரேன் மீது தாக்குதல் நடத்தியது. அதன் காரணமாக உலக அரங்கில் ரஷ்யாவை தனிமைப்படுத்த மேற்குலக நாடுகள் முயன்றன.

அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அதிபராகியதன் பிறகு இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் பதற்றமான சூழ்நிலை நிலவியது. அதே சமயம் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து வலுவடைந்தன.

மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை தனிமைப்படுத்த முயன்றாலும், அந்தத் தந்திரம் வெற்றிபெறவில்லை. மேலும் மேற்கு நாடுகளுக்கு வெளியே இந்தியா, சீனா, ஆபிரிக்கா மற்றும் மேற்கு ஆசியாவில் நாடுகளில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் தலைமையிலான அரசை வரவேற்கிறார்கள்,மேலும் உறவை பேணி காக்கிறார்கள்.

இதற்கு முக்கிய காரணம் ரஷ்யா நீண்ட காலமாக இந்த நாடுகளுக்கு ஆதரவளித்து வருகிறது. இப்போது இந்த நாடுகள் ரஷ்யாவிற்கு ஆதரவளிக்கின்றன. இது ரஷ்யாவுக்கு மிக முக்கியமான காலகட்டமாகும்.

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான உறவுகளுக்கு ஒரு நீண்ட வரலாற்று தொடர்பு உள்ளது. புட்டின் பதவிக்கு வந்த பிறகான கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இந்த உறவு வளர்ந்து கொண்டே இருக்கிறது.

மேலும் பாதுகாப்புத் துறை, அணுசக்தி வளத்துடன் ரஷ்யாவுடன் நீண்ட காலமாக உறவை இந்திய அரசு தொடர்ந்து கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளின் உரிமைகளை பாதுகாக்க மட்டக்களப்பில் விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு, டிசெ. 14

சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தை மையமாகக் கொண்ட விழிப்புணர்வு நிகழ்வு மட்டக்களப்பு, சத்துருக்கொண்டானில் அமைந்துள்ள சர்வோதய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், என 20 பேர் கலந்து கொண்டனர்.

சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவின் முகாமையாளர் ரசிக்க குணவர்த்தன, அக்குழுவின் பணிப்பாளர் சுதேஸ் நந்திமாசில்வா, திட்ட அதிகாரி தி. ஷாமினி, ஊடக இணைப்பாளர் கெலும் விஜேசிங்க ஆகியோர் கலந்து கொண்டு சிறைக்கைதிகளின் உரிமைகள் தொடர்பிலும், கைதிகள் தொடர்பில் சர்வதேச ரீதியில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் தொடர்பிலும் விளக்கமளித்தனர். (எ)

# பயனாளர்கள் 33 பேருக்கு வீடு புனரமைக்க நிதியுதவி



திருகோணமலை, டிசெ. 14

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையால் வீடு புனரமைத்தல் மற்றும் திருத்தப் பணிகளுக்காக வழங்கப்படும் 2 இலட்சம் ரூபாய் நிதி உதவி, பயனாளர்கள் 33 பேருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

இந்த நிதி மூன்று கட்டங்களாக பயனாளர்களுக்கு வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களது இருப்பிட வீட்டு வசதிகளை மேம்படுத்த ஒரு சாதகமான திட்டமாக எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் ஜீ.சுகுமாரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ-12)

# சட்டவிரோத 69 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் பறிமுதல்

கொழும்பு, டிசெ. 14

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 69 வெளிநாட்டு மதுபான போத்தல்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளுக்கமைய, இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. (எ)

# இலங்கையில் 6 பேரில் ஒருவர் வறுமையின் பிடியில் தவிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 14

இலங்கையில் 6 பேரில் ஒருவர் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இவர்களை நாம் மீட்டெடுக்க வேண்டும். வறுமையான மக்களைக் கொண்ட நாடாகத் தொடர்ந்து இந்த நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாது என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மண்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'பிரஜா சக்தி' தலைவர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் வறுமை ஒழிப்பு என்ற பெயரில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், அவை தோல்வியடைந்த திட்டங்களாகவே அமைந்தன. அரசியல் நோக்கங்களுக்காக அந்தத் திட்டங்களைப் பயன்படுத்தியதே இதற்குக் காரணம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, கிராமிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, கிராம மட்ட அபிவிருத்தியை உறுதி செய்யும் நோக்கில் 'பிரஜா சக்தி' வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. கிராமிய ரீதியில் வறுமையை ஒழித்து, சுபீட்சமான நாட்டை உருவாக்கும் நோக்கிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது- என்றார். (எ)

# ஆயுதங்கள் கைப்பற்றல்

புத்தளம், டிசெ. 14

புத்தளம்- கொட்டுகச்சி, பலுகஸ்வெவ பிரதேசத்தில் உள்ள காணியில் பொதியிலிருந்து துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளதாக புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் தலைமையக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பிஸ்டல் ரக துப்பாக்கியும் அதற்குரிய தோட்டாக்களுமே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் புத்தளம் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மான் இறைச்சி, துப்பாக்கியுடன் சம்மாந்துறையில் இருவர் கைது

சம்மாந்துறை, டிசெ. 14

மான் இறைச்சி, வேட்டைக்கு பயன்படுத்திய துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் வைத்திருந்த இரு சந்தேகநபர்களை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது துப்பாக்கி, தோட்டாக்கள், மான் இறைச்சி, வான், மோட்டார் சைக்கிள் என்பன கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பகுதியில் உள்ள பளவழி கிராமம் புதிய வளத்தாப்பிட்டியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை குறித்த இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர். (எ-01)

# பேஸ்புக் விருந்து சுற்றிவளைப்பு: 22 இளைஞர்கள், 4 யுவதிகள் கைது

## பல்வேறு போதைப்பொருட்கள் மீட்பு

கண்டி, டிசெ. 14

தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விக்ரோரியா நீர்த்தேக்கத்துக்கு அருகிலுள்ள ஹோட்டல் ஒன்றில் நடத்தப்பட்ட 'பேஸ்புக் விருந்து' ஒன்றை சுற்றிவளைத்த பொலிஸார், போதைப்பொருட்களுடன் 22 இளைஞர்களையும் 4 யுவதிகளையும் கைது செய்தனர்.

நேற்று அதிகாலை முன்னெடுக்கப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பின் போது, பல்வேறு வகையான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் விவரம் வருமாறு,

ஐஸ் போதைப்பொருள் - 4,134 மில்லி கிராம், ஹேஸ்- 1,875 மில்லி கிராம், குஷ் - 2769 மில்லி கிராம், கொக்கைன் - 390 மில்லி கிராம், மஷ்ரூம் போதைப்பொருள் - 804 மில்லி கிராம், போதை மாத்திரைகள் - 13, சட்டவிரோத சிகரெட்கள் - 12, கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 18 முதல் 31 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், அவர்கள் கண்டி, முல்லேரியா, ஹற்றன், பிலகல, அத்துருகிரிய, கொட்டகெதர, ஹோமாகம, தொம்பே, எம்பிலிப்பிட்டிய, திருகோணமலை மற்றும் ஜா-எல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட யுவதிகள் 21 முதல் 26 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், கண்டி, நீர்கொழும்பு மற்றும் பூண்டுலோயா ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெல்தெனிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# மிரிஹானயில் விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, டிசெ. 14

மிரிஹான - பழைய கொட்டாவ வீதியில், எதிரிசிங்க மாவத்தைக்கு திரும்பும் சந்திக்கு அருகில், இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மிரிஹானவிலிருந்து எம்புல்தெனிய நோக்கிச் சென்ற ஓட்டோ, சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல், வீதிக்கு அருகிலுள்ள தொலைபேசி கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோ சாரதியும், அதில் பயணித்த பெண் ஒருவரும் படுகாயமடைந்து, களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சாரதி உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்தவர் தலவத்துகொட பகுதியை சேர்ந்த 60 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. (எ)

# செல்வத்துப் பயனே...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதியைப் பெற்றுத்தான் உதவ வேண்டும் என்று காத்திருக்காமல் எல்லாருக்கும் வாரி வழங்கு" என்று ஆணையிட்டார்.

வறுமை முன்பு வாழ்வில்தான் இருந்ததே தவிர எப்போதும் மனத்தில் இல்லை என்பதைப் போலவும், வள்ளல் செல்வத்தை மட்டும் தரவில்லை வள்ளன்மையும் தந்துவிட்டார் என்பதைப் போலவும், தமிழர்தம் உள்ளம் செல்வம் நிறைந்தபோது துள்ளிக் குதிப்பதும் வறண்டபோது துவண்டுபோவதும், இல்லையென்பதை உலகத்துக்கு உணர்த்துவது போலவும் இந்த அற்புத நிகழ்வு வரலாறாகப் பதிந்திருக்கிறது.

குவிகின்ற செல்வத்தை எப்படிப் பல்லுயிரோடும் பகிர்ந்து வாழ வேண்டும் என்னும் பொதுவுடைமையைப் பரக்கப் பேசுகிறது தமிழ் மரபு. வறுமைக்கு எதிரான வள்ளன்மையை முன்னிறுத்துகிறது தமிழர் வாழ்வியல். ஏழ்மையை விரட்டும் தோழமையைப் புகட்டுகிறது ஆன்மிக ஒழுங்கு. வழிவழியாக வந்த இந்த மாண்புகளைத் தமிழர்கள் எங்கே தவற விட்டார்கள்?

சங்கம் தொடங்கி, அற இலக்கியங்களும், காப்பியங்களும், பக்தி இலக்கியங்களும் போதித்த பல்லுயிர் ஓம்புகின்ற செல்வ நிலையாமை வாழ்வு எங்கே மறைந்தது?

இது வையகத்தின் இயல்பான நடைமுறையன்று. நெறிமுறை பிறழ்ந்த நடைமுறையே! என்று நம்காலத்தையும் கணித்தவர் மறைந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார். தமிழ்மரபு காட்டும் செல்வத்துப் பயனான ஈதலை மேற்கொள்ளும் உயரிய சமுதாயம் அமைந்து விட்டால் உலகம் உய்தி பெறுமே. (தினமணி)

# நீதிமன்றங்களால் 88 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் கைது!

கொழும்பு, டிசெ. 14

பண மோசடியில் ஈடுபட்டமைக்காக பல்வேறு நீதிமன்றங்களால் 88 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - அத்துருகிரிய பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளை பெற்றுத் தருவதாகக் கூறியே இவர் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார். சந்தேகநபர் வாதுவையைச் சேர்ந்த, 56 வயதுடையவராவார். இவருக்கு எதிராக மொறட்டுவை, காலி, வரக்காபொல, பாணந்துறை நீதிமன்றங்களால் 88 பிடியாணைகள் பிறப்பித்துள்ளன என்று தெரியவருகிறது.

அத்துருகிரிய பொலிஸார், இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரிடர்..

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நிவாரணக் கொடுப்பனவுகள் மக்களைச் சென்றடைவதில் ஏற்படும் தாமதங்கள் குறித்தும் அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று சனிக்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. மன்னார் மாவட்டச் செயலகத்தை வந்தடைந்த ஜனாதிபதியை, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பிரதியமைச் சரும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க மற்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஆகியோர் வரவேற்றனர்.

வரவேற்புரையைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, அனர்த்தத்தின்போது அரச அதிகாரிகள் ஆற்றிய பணிகளைப் பாராட்டினார். “பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான முதற்கட்ட உதவிகளை நீங்கள் வழங்கியுள்ளீர்கள். தற்பே

ாது அவர்களின் வாழ்வாதாரத் துறைகளான விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதிலும், உட்கட்டுமானங்களை மீளமைப்பதிலும் எமது முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்“ எனத் தெரிவித்தார்.

இதன்போது ஒவ்வொரு துறை சார்ந்தும் ஜனாதிபதி விரிவாக ஆராய்ந்தார். வீதி அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்திய அவர், மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ள வீதிகள் மற்றும் அவற்றுக்கான நிரந்தரத் திருத்த மதிப்பீடுகள் குறித்துக் கேட்டறிந்தார். மேலும், மன்னார் மாவட்டத்தின் வெள்ள நீர் கடலைச் சென்றடைவதற்கான வடிகால் வாய்க்காலின் அளவு போதாமையாக உள்ளமை குறித்து ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பில் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு துரித நடவடிக்கை எடுக்குமாறு அவர் பணிப்புரை விடுத்தார்.

மின்சாரம் மற்றும் குடிதன்ணீர் விநியோகம் குறித் தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. பாதிக்கப் பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் வழங்குவதில் நிலவும் சிரமங்கள் மற்றும் தாமதங்கள் குறித்து ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார். உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாகக் கிணறுகள் துப்புரவு செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும், தொலைத்தொடர்பு வசதிகள் மீளமைக்கப்பட்டுள்ளனவா என்பதையும் அவர் அதிகாரிகளிடம் வினவினார்.

நீர்ப்பாசனம் மற்றும் விவசாயத் துறை குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி, பெரும்போகத்துக்கான நீர் விநியோகம், மீள்விதைப்புக்கான ஆயத்தங்கள் மற்றும் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலப்பரப்புகள் குறித்துக் கேட்டறிந்தார். நிவாரணக் கொடுப்பனவுகள் மக்களைச் சென்றடைவதில் ஏற்படும் தாமதங்கள் குறித்தும் அவர் தனது அதிருப்தியை வெளியிட்டார். மரக்கறி மற்றும் தானியச் செய்கை அழிவுகள் தொடர்பிலும், குறிப்பாக வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களின் இழப்புகளுக்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனவும் ஜனாதிபதி வினவினார். இதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், அடுத்த ஆண்டு வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கவும், குறுகிய காலத்தில் விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மாகாண விவசாய அமைச்சு ஏற்கனவே முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கால்நடை இழப்பீடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, பதிவு செய்யப்படாத கால்நடைகளுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்குத் தனியான பொறிமுறை அவசியம் எனச் சுட்டிக்காட்டினார். பதிவு செய்யப்பட்டவர்களுக்கான இழப்பீட்டை உடனடியாக வழங்குமாறும், பதிவு செய்யப்படாதவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படும்போது முறைகேடுகள் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்யுமாறும் அவர் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். மேலும், நீரேந்துப் பிரதேசங்களை ஆக்கிரமித்து நெற்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணித்தார்.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான 25,000 ரூபா கொடுப்பனவு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான நிவாரணங்கள் வழங்குவதில் ஏற்படும் தாமதங்கள் குறித்தும் ஜனாதிபதி அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார். எதிர்வரும் டிசெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் நிவாரணப் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என அவர் உத்தரவிட்டார். இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பாடசாலைப் புத்தகங்கள் அழிவடைந்துள்ளமை குறித்துக் கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி அது தொடர்பில் தனது அவதானத்தை செலுத்தினார்.

முழுமையாகப் பாதிக்கப்பட்ட வீடுகள், அபாய வலயங்களில் வசிப்போரை மீள்குடியேற்றுதல் மற்றும் நிவாரண உதவிகள் பகிர்ந்தளிப்பு குறித்தும் ஜனாதிபதி தெளிவான வழிகாட்டல்களை வழங்கினார்.

இறுதியாகச் சுகாதாரத் துறை குறித்து வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விளக்கமளித்தார். வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையிலான முன்னாயத்தக் கூட்டங்கள் மற்றும் முன்னேற்பாடுகள் காரணமாகப் பேரிடரால் எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லை எனவும், ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சின் உதவிகள் உரிய நேரத்தில் கிடைத்தன எனவும் அவர் தெரிவித்தார். வெள்ள அனர்த்த வேளைகளில் நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கு ஏற்ற விசேட உயரமான அம்புலன்ஸ் வண்டி மற்றும் அம்புலன்ஸ் படகுத் தேவையை அவர் முன்வைத்தார். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, உடனடித் தீர்வுகள் குறித்தும், எதிர்கால நீண்டகாலத் தீர்வுகள் குறித்தும் கவனம் செலுத்துவதாக உறுதியளித்தார்.

இக்கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், து.ரவிகரன், ப.சத்தியலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், ரிஷாத் பதியுதீன், காதர் மஸ்தான், பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சுக்களின் செயலாளர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ)

## வடக்கு...

உரிமைகளை இழப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்“ என அவர் உறுதியாகத் தெரிவித்தார். (அ)

## இலங்கைக்கு...

தெளிவுபடுத்தியுள்ளார்.

உலகளாவிய முக்கிய கப்பல் வழித்தடங்களின் மத்தியில் அமைந்துள்ள இலங்கையின் மூலோபாய இருப்பிடம், “சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசுபிக்“ கொள்கைக்கு மையமாக உள்ளது.

அமெரிக்க கப்பல்கள் மற்றும் உலகின் மசகு எண்ணெய் போக்குவரத்து இங்கு நடைபெறுவதால், இலங்கை யின் கடல்சார் பாதுகாப்பை உறுதிசெய்வது முக்கியமாகும்.

எனவே, இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கு உட்பட எதிர்ப்பு செல்வாக்குகளை எதிர்கொள்வது அமெரிக்காவின் முக்கிய இலக்காகும் என எரிக் மேயர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வரும் இலங்கையை, பிராந்திய பொருளாதாரத் தலைமையாக மாற்றுவதற்கு ஆதரவளிப்பதுடன், பொருளாதார இறையாண்மையின் முக்கியத்துவத்தைக் கருதி, சர்வதேச நாணய நிதியத்துடன் இணைக்கப்பட்ட மறுசீரமைப்புகளைத் தொடர இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தவுள்ளதாகவும் அவர் உறுதியளித்தார்.

அதேநேரம், “டித்வா“ சூறாவளிக்கு அமெரிக்கா 2 மில்லியன் டொலர் அவசர உதவியை வழங்கியது, இது இலங்கையுடனான வலுவான மற்றும் நீடித்த கூட்டாண்மையை நிரூபிப்பதாக எரிக் மேயர் குறிப்பிட்டார்.

இதனிடயே ஹம்பாந்தோட்டை துறைமுக விடயத்தில் சீனா நடந்துகொண்ட விதம் உலகிற்கு எச்சரிக்கை என்று செனட் குழுத் தலைவர் விமர்சித்தபோது, அமெரிக்கா ”திறந்த மற்றும் வெளிப்படையான” உறவுகளை ஆதரிப்பதாகவும், துறைமுகங்கள் உட்பட இறையாண்மையை நிலைநாட்ட இலங்கைக்கு ஆதரவளிப்பதாகவும் எரிக் மேயர் பதிலளித்தார்.

அத்துடன், பேரிடர் நிவாரணம், கடத்தல் தடுப்பு, கடல்சார் விழிப்புணர்வு மற்றும் துறைமுகப் பாதுகாப்பு போன்ற விடயங்களில் அமெரிக்கா தனது பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்க ஒத்துழைப்பை இலங்கையுடன் அதிகரிக்கும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார். (அ)

## இலங்கை...

அவர் பிரதமர் கலாநிதி ஹரினி ஹரிணி அமரசூரியவை சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்படி உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையை பாதித்த திடீர் அனர்த்த நிலைமையின் பின்னர், மனிதாபிமான உதவி மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்காக அவுஸ்திரேலியா வழங்கிய உதவிக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் நன்கொடையாக 3.5 மில்லியன் டொலர் நிதி உதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் நம்பகமான கல்விப் பங்காளி என்ற வகையில் தமது ஆதரவை ஆஸ்திரேலியா தொடர்ந்தும் வழங்கும் என அவுஸ்திரேலிய பிரதிநிதிகள் உறுதியளித்தனர். (அ)

## இயற்கை...

இற்கும் மேற்பட்ட சுகாதார நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட சுகாதார நிறுவனங்களை மீண்டும் வழமைக்குக் கொண்டுவர மேலும் கால அவகாசம் எடுக்கும்-என்றார்.

சுகாதார பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி கருத்து வெளியிடுகையில்-

அனர்த்த நிலைமை காரணமாக 53 வைத்தியசாலைகளில் உள்ள உபகரணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மகியங்கனை வைத்தியசாலை மற்றும் சிலாபம் வைத்தியசாலை ஆகிய இரண்டிலும், அந்த நேரத்தில் ஊழியர்கள் எடுத்துச் செல்ல முடிந்த அனைத்து உபகரணங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

குறிப்பாக, மகியங்கனையில் நிறைய உபகரணங்கள் - அதாவது சில இயந்திரங்களில் கழற்றக்கூடிய பாகங்களை எடுத்து மேலே கொண்டு சென்றுள்ளனர்.

பெரிதும் சேதமடைந்தவை மூன்று உள்ளன. ஒன்று சிலாபம் வைத்தியசாலை, மற்றொன்று மஹியங்கனை, மற்றொன்று வத்தேகம. அதில் பெரிய சேதங்கள் இல்லை. கட்டடங்களில் சேதமடைந்தவை 236 ஆகும். உபகரணங்களில் சேதம் உள்ளவை 53 ஆகும். அது குறித்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-என்றார். (அ)

## நடுநிலையான...

சேதமடைந்து பலர் இடம்பெயர்ந்துள்ளனர். வெள்ளம் காரணமாக விவசாயிகள் மிகக் கடினமான பொருளாதார நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

வீடுகளுக்கும், இழந்த உயிர்களுக்கும் நட்டஈடு வழங்குவதாக அரசாங்கம் கூறுவது குறித்து தற்போது எதையும் கூற முடியாது. அரசாங்கம் கொடுக்க முடியும் என்றால் அது நல்லது. எதிர்காலத்தில் தான் அது செய்யப்படுமா இல்லையா என்று பார்க்க முடியும்.

பிளவுபட்டவர்கள் ஒன்று சேர்ந்திருப்பது நல்லது. இன்னும் சில வழக்குகள் உள்ளன. வழக்குகள் முடிந்த பிறகு இதுபற்றி யோசிக்கலாம். நாடு எதிர்கொள்ளும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, சண்டை சச்சரவுகளை மறந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

சர்வதேச அளவில் நமது சமநிலையை வலுப்படுத்த வேண்டும். நடுநிலையான, பாரபட்சமற்ற வெளியுறவுக் கொள்கை மிகவும் அவசியம்.

வல்லரசுக் கூட்டணிகளில் சேராமல், குறிப்பாக பண்டாரநாயக்க அம்மையாரின் காலத்தில் இருந்தது போல, அணிசேரா கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும். நாட்டை மீட்பதற்கான பதில் மிக நீளமானது. வெளிநாட்டுக் கொள்கையில் நடுநிலைமை மிகவும் முக்கியமானது-என்றார். (அ)

## டிசெம்பர்...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று (நேற்று) முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வானிலை சீரான நிலைமையில் காணப்படும். எனினும் ஒரு சில பகுதிகளில் அவ்வப்பொழுது மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.

அதேபோல மத்திய, ஊவா, சப்ரகமுவ, தெற்கு மற்றும் மேற்கு மாகாண பகுதிகளில் அவ்வப்பொழுது மழை கிடைக்கும் சாத்தியமுள்ளது.

அதேவேளை எதிர்வரும் 16 ஆம் திகதி தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் சிறிய அளவிலான காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

இதனால் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஒரு சில இடங்களில் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் வடக்கு, கிழக்கு, மத்திய, சப்ரகமுவ,ஊவா, வடமத்திய, மாகாணங்களில் கன மழை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது .

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் தொடர்ச்சியாக மழை கிடைத்து வருகின்றது. இதனால் சில இடங்களில் நிலச்சரிவு நிகழ்வுகளும் பதிவாகியுள்ளன. இந்த நிலைமையில் எதிர்வரும் 16.12.2025 முதல் 19.12.2025 வரை இப்பிரதேங்களில் கன மழை வாய்ப்பும் உள்ளது. எனவே இந்த நாட்களிலும் நிலச்சரிவைத் தூண்டும் கனமழை கிடைக்கும் என்பதனால் மக்கள் நிலச்சரிவு தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம்.

நிலச்சரிவு அபாயத்தின் காரணமாக வெளியேற்றப்பட்டு தற்போது பாதுகாப்பான இடங்களில் உள்ள மக்கள் மேற்குறிப்பிட்ட இந்த நாட்களிலும் பாதுகாப்பான இடங்களில் இருப்பதே சிறப்பு.

இன்றைய நிலையில் நாட்டின் பல பிரதேசங்களிலும் உள்ள பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் வான் பாய்கின்றன. இந்த டிசெம்பர் மாதம் முடியும் வரையில் அவ்வப்போது மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அதிலும் குறிப்பாக 16-19, 23-29 ஆம் திகதிகளில் நாடு முழுவதும் மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஆகவே நீர்த்தேக்கங்களின் நிர்வாகத்தோடு தொடர்புடையவர்கள் இந்த மழை நாட்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவது சிறந்தது.

அத்தோடு தற்பொழுது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் நிலவுகின்ற குளிரான வளிமண்டல நிலைமை எதிர்வரும் 16ஆம் திகதி வரைக்கும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே மக்கள் இது தொடர்பாகவும் விழிப்பாக இருப்பது அவசியம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இடரால் பாதிப்புற்ற சிறுவரின் தகவல்களைப் பகிரவேண்டாம்!

## மகளிர், சிறுவர் அலுவல்கள் அமைச்சு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 14

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான தகவல்களைப் பகிர வேண்டாம்"

அனர்த்தச்சூழல் நிலவுவதால், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் புகைப்படங்கள், காணொளிகள் அல்லது தனிப்பட்ட விவரங்களை சமூக ஊடகங்களில் அல்லது பிரதான ஊடகங்களின் மூலம் பகிர்வதைத் தவிர்க்குமாறு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு கோரியுள்ளது.

இத்தகைய செயல்கள் இச்சிறுவர்களின் அடையாளம் மற்றும் அந்தரங்கத்திற்கு தீங்கு விளைவிக்கலாம் என்பதுடன், இந்த படங்கள் மற்றும் விவரங்கள் கடத்தல்காரர்கள் மற்றும் பிற குற்றவாளிகளின் கைகளில் சென்று தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு வழிவகுக்கும் என அமைச்சு மேலும் கூறியுள்ளது.

சிறுவர்களை சுரண்டுதல் மற்றும் ஆட்கடத்தல் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவதற்கு அத்தகைய தகவல்களைப் பயன்படுத்தும் தனிநபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் அது தெரிவித்துள்ளது.

இத்தகைய சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அல்லது அத்தகைய கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் குறித்து உங்களிடம் தகவல் இருந்தால், தயவுசெய்து 1929 சிறுவர் உதவி இலக்கத்துக்கு தெரியப்படுத்தவும் அல்லது அருகிலுள்ள பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரி அல்லது சிறுவர் பாதுகாப்பு அதிகாரிக்கு அறிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் நல்வாழ்வை உறுதிசெய்து, அவர்களைப் பாதுகாப்பதற்கும் கவனித்துக்கொள்வதற்கும் நமது அன்பைப் பயன்படுத்துவோம் மகளிர், சிறுவர் அலுவல்கள் அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

## பிரதமரின் தீர்மானத்தை வரவேற்கின்றார் நாமல்!

கொழும்பு, டிசெ. 14

பிரதமர் ஹரிணி அமரசூரிய சபாநாயகரைக் கோரி பாராளுமன்றத்தைக் கூட்ட எடுத்த முடிவை நான் மனதார வரவேற்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை பதிவிட்டுள்ளார்.

அதில், "வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நான் பார்வையிட்டபோது, கடந்த சில நாள்களாக தமது வீடுகளையும், வாழ்வாதாரத்தையும், ஏன் உணவு மற்றும் சுத்தமான குடிதண்ணீர் போன்ற அடிப்படை வசதிகளையும்கூட இழந்த குடும்பங்களைச் சந்தித்தேன்.

இந்தச் சூழலில், ஒவ்வொரு சமூகத்தையும் உதவி சென்றடைவதை உறுதி செய்யவேண்டிய பொறுப்பு இப்போது பாராளுமன்றத்துக்கு உள்ளது.

இந்தத் தருணம் அரசியலைப் பற்றியதல்ல, மக்களைப் பற்றியது என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## டித்வா பேரிடரின்போது காணாமல்போன வெளிநாட்டவர்களுக்கும் மரண சான்றிதழ்

கொழும்பு, டிசெ. 14

டித்வா சூறாவளியால் காணாமல்போன வெளிநாட்டவர்களுக்கும் மரணச் சான்றிதழை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் சசி தேவி ஜலதீபன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இற்றைப்படுத்தப்பட்ட சுற்றறிக்கையும் வெளியிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, காணாமற்போன வெளிநாட்டவர்கள் தொடர்பில் அவர்களுடைய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கொன்சூலர் ஜெனரல் அலுவலகம் மற்றும் தூதுவர்கள் ஊடாக, பதிவாளர் நாயகத்துக்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியும்

அந்த விண்ணப்பம் தொடர்பில் பதிவாளர் நாயகத்தினால் விடயங்கள் ஆராயப்பட்டு, தகவல் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தங்களில் காணாமல்போன வெளிநாட்டவர்களுக்கான மரணச் சான்றிதழ் விநியோகிக்கப்படும் என பதிவாளர் நாயகம் குறிப்பிட்டார்.

டித்வா சூறாவளியின் பின்னர் பேரிடர் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 22 மாவட்டங்களில் தங்கி இருந்த வெளிநாட்டவர்களுக்கு மாத்திரமே இந்த நடவடிக்கை பொருந்தும் எனவும் அவர் கூறினார்.

அதன்படி காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களைத் தவிர்ந்த நாட்டின் ஏனைய 22 மாவட்டங்களிலும் தங்கி இருந்த வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு இந்த நடைமுறை அமுலாக்கப்படும் என பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## போலி நாணயத்தாள்களின் புழக்கம் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 14

தமது கைகளுக்குக் கிடைக்கும் நாணயத்தாள்கள் குறித்து பொதுமக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ.வுட்லர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பண்டிகைக் காலத்தில் போலி நாணயத்தாள்களின் புழக்கம் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## வழமைக்கு வந்த நீர் விநியோகம்!

கொழும்பு, டிசெ. 14

அனர்த்தம் காரணமாக தடைப்பட்ட நீர் விநியோகம் நாடுமுழுவதும் முழுவதும் 100 வீதம் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, அனர்த்தத்தினால் சேதமடைந்த நீர் மானிகளை இலவசமாக சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய நீர் வழங்கல் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

## மீண்டும் புயல் அபாயம்!

கொழும்பு, டிசெ. 14

வடகிழக்கு பருவப்பெயர்ச்சி காற்று வலுவடைந்துள்ள நிலையில், டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலங்கள், அலை வடிவக் குழப்பங்கள், தாழமுக்கங்கள் அல்லது புயல்கள் உருவாகும் அபாயம் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளில் வடகிழக்கு பருவப்பெயர்ச்சி செயற்பட்ட விதம் குறித்த தரவுகளை ஆய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் ஊடாக இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதன்படி, வடக்கு மாகாணத்தில் சாதாரண மழைவீழ்ச்சியை விட அதிக மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கலாம் எனவும், வடமத்திய, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சாதாரண மழைவீழ்ச்சியை அண்மித்த மழை பெய்யக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் சாதாரண மழைவீழ்ச்சியை விடக் குறைவான மழைவீழ்ச்சியே நிலவும் என அந்தத் தரவுகளின் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது. (அ)

## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்.சிறைச்சாலையால் நிவாரண பொதி




யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழில், வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொதிகள் யாழ்ப்பாண சிறைச்சாலையால் நேற்று வழங்கப்பட்டன.

குறித்த நிவாரணப் பொதிகள் நேற்று காலை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபனிடம், யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகர் சீனிவாசன் இந்திரகுமாரால் மாவட்ட செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகர் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களின் நன்கொடை மற்றும் சிறைக்கைதிகளின் மதிய உணவை தவிர்த்து இந்த நிவாரணம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சட்டவிரோதமான சொத்துகளை அரசுடைமையாக்க நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 14

இலங்கையில் திட்டமிட்ட குற்றவாளிகளால் சட்டவிரோதமான முறையில் ஈட்டப்பட்ட சொத்துக்களைத் தடை செய்வதற்கும், அவற்றை அரசுடைமையாக்குவதற்குமான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யூ. வூட்லர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி கடந்த மற்றும் நடப்பு ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குள் 354 பவுண் தங்கம், 77 வாகனங்கள், 35 கோடி ரூபா பணம் மற்றும் நூறு கோடிக்கும் அதிக பெறுமதியான பல்வேறு சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதில் 2024ஆம் ஆண்டில் மாத்திரம் 150 பவுண் தங்கம், 64 வாகனங்கள், 6 கோடி ரூபா பணம் மற்றும் 61 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குத் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று, இந்த ஆண்டில் இதுவரை 204 பவுண் தங்கம், 13 வாகனங்கள், 67 கோடியே 78 இலட்சம் ரூபா பெறுமதியான காணி மற்றும் ஏனைய சொத்துக்கள், மற்றும் 18 வீடுகள் எனச் சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட பெருமளவிலான சொத்துக்களை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## அரச ஊழியர்களுக்கு பண்டிகை முற்பணம்

கொழும்பு, டிசெ. 14

அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு 4,000 ரூபாவுக்கு மிகைப்படாத விசேட முற்பணத்தை வழங்குவது தொடர்பான சுற்றறி க்கை வெளியிடப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக பண்டா ரவினால் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு இந்தச் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு ஒவ்வொரு வருட மும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இந்த முற்பணம் வழங்கப்படுவது வழக்கமாகும்.

இதற்கமைய, 4,000 ரூபாவுக்கு மிகைப்படாத இம் முற்பணக் கொடுப்பனவானது ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, அவ்வருடம் பெப்ரவரி மாத இறுதித் தினத்திற்குள் நிறைவு செய்யப்படவேண்டும்.

இந்த முற்பணத் தொகை 8 வீத வருடாந்த வட்டியுடன், 10 சமமான மாதத் தவணைகளில் அறவிடப்பட வேண்டும் எனப் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org